# விவேகவாணி

செப்டம்பர் 2011 – கர ஆவனி–புரட்டாசி கலி 5112 ரூ.7/–






# விவேகவாணி

**விவேகானந்த கேந்திர மாத இதழ்**

**விவேகானந்தபுரம்,**

**கன்னியாகுமரி - 629 702**

**வணக்கம் வாருங்கள்!!**

**வெளியீட்டு அலுவலகம்:**

விவேகானந்த கேந்திரம், 5, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேனி,
சென்னை - 600 005

அன்புள்ள வாசக நேயர்களுக்கு,

நமஸ்காரம்.

**விவேகவாணியின் செப்டம்பர் - 2011**

இதழ் ஆசிரியர் தினம் (செப்டம்பர் 5) உலக சகோதரத்துவ தினம் (செப்டம்பர் 11) ஆகியவற்றைக் குறிக்கும் வண்ணம், வெளிவருகிறது.

சுவாமி விவேகானந்தர் உலக மனித குல ஒற்றுமைக்கு அடிகோலிய நாள் செப்டம்பர் 11. சுவாமிஜிக்கு நம் அஞ்சலி.

சகோதரி நிவேதிதையின் வாழ்க்கை வரலாற்றுத் தொடர் சுவாரசியமாக வந்து இம்மாதம் நிறைவு பெறுகிறது. வாசக நேயர்கள் பாராட்டிய தொடர் இது.

மூதாதையரை வழிபடும் மஹாளய பட்சம், நவராத்ரி ஆகிய புனிதத் தினங்கள், நம் மரபிலும், ஆன்மீக சமய உணர்விலும் பெருமிதம் கொள்ள நம்மைத் தூண்டுமாக.

வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும்.

**இப்படிக்கு,**
**இறைவன் பணியில்,**
**விவேகவாணி**

**செப்டம்பர் - 2011**

**சென்னை தொலைபேசி: (044) - 28440042/28442843**

**சென்னை ஈமெயில்: vkpt@vkendra.org**

**தவம் 27 செப்டம்பர் 2011 சேவை - 5**

**தனிப்பிரதி ரூ. 7/-, ஆண்டுச்சந்தா ரூ. 75/-, இரண்டாண்டுச் சந்தா ரூ. 140/-, மூன்றாண்டுச் சந்தா ரூ. 200/-, ஆயுட்சந்தா (10 ஆண்டுகள்) ரூ. 700/-, வெளிநாட்டு ஆண்டுச் சந்தா 20 டாலர்கள்.**

அட்டைப்பட விளக்கம்

## தத்துவ மேதை ராதாகிருஷ்ணனின் சிந்தனைகள்

விவேகவாணியின் செப்டம்பர் 2011 இதழ் அட்டையில் தத்துவமேதை முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனின் திருவுருவப்படத்தைத் தாங்கி வருகிறது. சுவாமி விவேகானந்தரின் அடியொற்றி பாரதப் பண்பாட்டின் மகத்தான அம்சங்களை அவர் மேற்கு நாடுகளில் எடுத்துரைத்தார். மதமாற்ற நோக்கத்துடன், நமது புனித நூல்கட்கு மேற்கு நாட்டவர் தந்த விளக்கங்களைப் புறக்கணித்தார். டாக்டர் ராதாகிருஷ்ணன் நமது மரபு சார்ந்த விளக்கங்களை நம் புனித நூல்கட்கு அளித்தார். அவருடைய பிறந்த தினம் செப்டம்பர் 5-ம் தேதி பாரத அரசால் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஆனிமாதப் பவுர்ணமியை நம்மரபில் குருபூர்ணிமாவாகக் கொண்டாடுகிறோம். உலக நிறுவனங்கள் அக்டோபர் 5-ம் தேதியை உலக ஆசிரியர்கள் தினமாகக் கொண்டாடுகின்றன.

## பாலவநத்தத்தில் பாங்குடன் பூஜை

விருதுநகர் மாவட்டம் பாலவநத்தம் ஆனந்தவல்லி கைலாசநாதர் திருக்கோயிலில் கேந்திரம் திருவிளக்குப் பூஜையை நடத்திற்று. 1008 விளக்கு பூஜையில் புலவர் அண்ணாமலை அய்யா, கோவில் நிர்வாகி தமிழ் செல்வன், சங்கரன் கோயில் சேகர், கோவில்பட்டி நாகசாமி, செயலர் அய்யப்பன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர். சமய வகுப்பு பஜனை, கலை நிகழ்ச்சி, ஊர்வலம் ஆகியவை சிறப்புடன் நடந்தேறின. அரசு மேல்நிலைப்பள்ளி, நாட்டுநலத்திட்டத் தொண்டர்கள் ஆகியோரின் பணிகளை, விளக்குப்பூஜை விழாவில் கலந்து கொண்டோர் பாராட்டினர்.

சில மாணவிகட்குக் கல்வி உதவியும் செய்யப்பட்டது. கேந்திரத் தொண்டர்கள் பேச்சியப்பன், கனகாம்பரம் விழா ஏற்பாடும் தகவலும். சித்ரா தேவியும், ஜயலட்சுமியும் பூஜையை நடத்தி வைத்தனர்.



# மாதம் ஒரு மந்திரம்

**மகாத்மா காந்தி விரும்பிய பாடல்**



வைஷ்ணவ ஜந தோ தேநே கஹீஏ, ஜே பீட பராஈ ஜாணே ரே |
பரது:கே உபகார கரே தோயே, மந அபிமாந ந ஆணே ரே ||
ஸகள லோகமாம் ஸஹுநே வந்தே, நிந்தா ந கரே கேணீ ரே |
வாச, காச, மந நிச்சள ராகே, தந தந ஜநநீ தேநீ ரே ||
ஸமத்ருஷ்டீ நே த்ருஷ்ணா த்யாகீ, பரஸ்த்ரீ ஜேநே மாத ரே |
ஜிஹ்வா தகீ அஸத்ய ந போலே, பரதந நவ ஜாலே ஹாத ரே ||
மோஹ மாயா வ்யாபே நஹி ஜேநே, த்ருட வைராக்ய ஜேநா மநமாம் ரே |
ராமநாமசும் தாளீ லாகீ, ஸகள தீரத் தேநா தநமாம் ரே ||
வணலோபீ நே கபடரஹித சே, காம க்ரோத நிவார்யா ரே |
பணே நரஸைம்யோ தேநும் தரஸந கரதாம், குள ஏகோதேர தார்யாம் ரே ||

**இப்பாடலின் பொருள்:**

வைஷ்ணவன் என்று எவனைக் கூறுவது?

எவன் ஒருவன் பிறர் துயரங்களை உணர்வானோ, பிறர் கஷ்டங்களைக் களைந்து உதவுவானோ, அகத்தில் அகந்தைக்கு இடமே கொடுக்கமாட்டானோ, அவனே உண்மையான வைஷ்ணவன்.

எவன் உலகத்தின் உயிரினம் அனைத்தையும் வணங்குகிறவனோ, எவன் பிறரை நிந்திக்கவே மாட்டானோ, எவன் மனம் – வாக்கு – காயம் ஆகியவற்றைச் சலனமின்றி வைத்துக்கொள்பவனோ, அவனைப் பெற்ற அன்னை மிகவும் கொடுத்து வைத்தவள்.

எவன் சமநோக்கு உடையவனோ, வேட்கையை விட்டொழித்தவனோ, பிற மாதர்களைத் தாயாக வணங்குபவனோ, எவன் பொய்யே பேச மாட்டானோ, பிறர் பொருளைக் கையால் தீண்டவும் மாட்டானோ அவனே உண்மையான வைஷ்ணவன்.

எவனை மோகமும் மாயையும் அணுகாவோ, எவன் மனத்திலே திட வைராக்கியம் குடிகொண்டிருக்குமோ, எவன் வாய் ராம நாமத்தையே ஓயாது ஓதிக் கொண்டிருக்குமோ, அவனுடைய உடல் எல்லாப் புனிதத் தீர்த்தங்களுக்கும் உறைவிடம் ஆகும்.

எவன் பேராசையும், கபடமும் இல்லாதவனோ, எவன் காமத்தையும் கோபத்தையும் விட்டொழித்தவனோ அவனே உண்மையான வைஷ்ணவன்.

அவனைத் தரிசிப்பவர்கள் தலைமுறை தலைமுறைக்கும் கடைத்தேறியவர்கள் ஆவார்கள்.

**– நரஸி மேதா**

## வேதத்தின் உட்பொருள்

# பிரணவம் எனும் ஓம்காரம் (247)

ஓம்காரம்

*மாண்டூக்கிய உபநிஷதத்தின் அடிப்படையில் சுவாமி பிரணவ சைதன்யபுரி ஹிந்தியில் எழுதி வாராணசி பரமார்த்த சாதக சங்கம் வெளியிட்டது*

*அத்தியாயம் - (2) ஓம்காரத்தின் மறைபொருள் - ஓம்காரமே அனைத்தும்*

**ப்ரகாச்ய மேவ ரூபம் ஸ்யாத் ப்ரகாசோ வாக் ததைவச |**
**வித்யாத் ஏதத் ஸமாஸேன லக்ஷணம் ரூப ஸம்ஞயோ (41)**

ஒளியால் விளங்குவதே ரூபம். அதே போல் ஒளியே வாக்கு ஆகும். சுருங்கக் கூறினால் இதுவே ரூபம், நாமம் இவற்றின் இலக்கணம் ஆகும்.

**நாமாமி க்ருஹ்யமாணம் ஸத்ரூபம் பவதி சௌக்ல்யவத் |**
**ரூபம் ச போதயத் தத்வத் நாமபக்ஷே S வதிஷ்டதே (42)**



நாமமும் கூட, அறியப்படும் நிலையில் வெண்மை முதலிய அறியப்படு பொருளுக்குச் சமமாக ரூபமே, உருவமே ஆகும். ரூபமும் அறிவூட்டும் நிலையில் நாமம் என்றே ஏற்கப்படுகிறது. அதாவது, ரூபமாயினும், நாமமாயினும், பிடிக்கப்படுவது (அறியப்படுவது) என்றால் அது ரூபமே! மேலும் நாமமாயினும் ரூபமாயினும் அறிவது ஆயின் (பிடிப்பது ஆயின்) அது நாமமே! இவ்விதம், அறியப்படு பொருள், ஞானம் (அறிதல்) இவற்றையே ரூபம், நாமம் என்று அழைக்கிறோம்.

தைத்ரீய உபநிஷதத்தில் வேதத்தினை மனோமய ஆத்மாவின் உறுப்பு என்று கூறப்பட்டுள்ளது – தஸ்ய யஜுரேவ சிர: (தை 32/3) உரையாசிரியர் சங்கராச்சாரியார் இங்கு வேதத்தை மேலான மன விருத்தி வடிவிலான ஞான வடிவம் என்றும் எப்போதும் ஆத்மாவைப் பற்றிய உணர்வு வடிவினது என்று ஏற்றுக் கொண்டுள்ளார். மனத்தின் விருத்தி வடிவினதெனினும் மந்தரங்களின் மனத்தளவிலான ஜபம் செய்யப்பட்டு ஏற்கப்படுகிறது. ஏனெனில் மனவிருத்திக்களைத்தான் மனத்தின் உள்ளேயே திரும்பத்திரும்ப மானஸ ஜபம் செய்வது இயலும். வேத மந்திரங்களின் சுயவடிவம் மனோவிருத்திகளில் இருந்து

வேறான வெளி ஓசை வடிவினது என்று ஏற்றால் அவற்றை மனத்தால் ஜபம் செய்வது இயலாது.

**"ஏவம் ச மனோவ்ருத்த்வே மந்த்ராணாம் வ்ருத்திரேவ ஆவர்த்யதே இதி மானஸோ ஜப உபபத்யதே! அன்யதா அவிஷயத்வாத் மந்த்ரோ நாவர்தயிதும் சக்யோ கடாதிவதிதி மானஸோ ஜபோ நோபபத்யதே!"**



மேலும் உரையாசிரியர் கூறுகிறார்:- மனவிருத்தி வடிவிலான உபாதியில் இருந்து வேறான, மனவிருத்தி எதன் வடிவமோ அந்த நித்ய சைதன்ய ஆத்ம உணர்வே வேதம் ஆகும். சாஸ்திரங்களில் வேதம் என்றுமுள்ளது என்பதும், ஆத்மாவில் இருந்து வேறானது அல்ல என்றும் கூறப்பட்டுள்ளது. இது ஆத்மாவையே வேதம் என்று ஏற்றால் தான் பொருள் உள்ளதாகும். இல்லாவிட்டால் வேதத்தை "அறியப்படுபொருள்" என்று ஏற்றால், ஆத்மாவில் இருந்து வேறான அனைத்தும் அநித்யம் என்பதால் வேதமும் அநித்யம் என்றாகி விடும்.

**தஸ்மாஸ் மனோவ்ருத்யுபாதி பரிச்சின்னம் மனோவ்ருத்தி நிஷ்டம் ஆத்ம சைதன்யம் அநாதி நிதனம் யஜு: சப்த வாச்யம் ஆத்ம விஞ்ஞானம் மந்த்ரா இதி! ஏவம் ச நித்யத்வோS பபத்திர் வேதானாம்! அன்யதா விஷயத்வே ரூபாதிவத் அநித்யத்வம் ச ஸ்யாத்! நைதத்யுக்தம் ஸத்வே வேதா யத்ரைகம் பவதி ஸ மானஸீன ஆத்மா' இதி ச ச்ருதிர் நித்யாத்மனா ஏகத்வம் ப்ருவத்ய்ருகா தீனாம் நித்யத்வே ஸமஞ்ஜஸா ஸ்யாத்| "ருசோ அக்ஷரே பரமே வ்யோமன் யஸ்மின் தேவா அதி விச்வே நிஷேது:| இதி சமந்த்ர வர்ண:|"**

வார்த்திகக்காரர் சுரேச்வாச்சாரியார் உரையாசிரியர் சங்கரரின் கருத்துக்குத் தன் சம்மதத்தை வெளியிடுகிறார். மந்திரங்களை ஞான வடிவாக ஏற்றால் தான் மானஸ ஜபம் செய்வது இயலும். **"ஜ்ஞானாத்மத்வே ஹி மந்த்ராணாம் கடதே மானஸோ ஜப:" தை. வா(2/16)** சிறப்பாகக் கூறுவது என்னவெனில் வாயால் (உரத்து) ஜபம் செய்வதைக் காட்டிலும் மானஸ ஜபத்திற்கு ஆயிரம் மடங்கு பலன் அதிகம். வெளியே கூறப்படும் ஓசைத் தொகுதிக்கு வேதம் என்று பெயரிடுவது சற்று தாழ்ந்தது தான் என்பது இதில் இருந்து நிரூபிக்கப்படுகின்றது. உண்மையான வேதம் ஞான வடிவினதே.

**பூயோSல்பீய: பலத்வம் சபாஹ்யமானஸயோர்ஜபே|**
**அதோ மானஸ முக்யத்வம் இதரஸ்யாஸ்து கௌணதா|| (தை.வா.2/19)**

மிக உயர்ந்த மன விருத்திகளில் இருந்து வேறான பிரம்ம சைதன்யமே வேதம் ஆகும். அப்போதுதான் வேதம் என்றுமுள்ளது முதலிய கருத்துக்கள்

ஏற்கப்படும் இனிய உண்மையாகும். அதோடு கூடவே, தானே ஒளிரும் உணர்வுமய சைதன்ய ரூபத்தை ஏற்பதால் வேதத்தில் தர்ம பிரம்ம முதலியவை உணரப்படக்கூடும் என்பது நிரூபிக்கப்பட முடியும். ஜட (உயிரற்ற) தூல ஓசை வடிவினதாகவோ ஜட, ஸ்போட வடிவினதாகவோ ஏற்பதால் வேத வாசகம் ஆகாது.

**தஸ்மாத் ஐச்வர விஞ்ஞானம் யஜுர் புத்தயாத்யுபாச்ரயம் (20) ஏவம் ச ஸதி நித்யத்வம் வேதானாம் கடதேSஞ்ஜஸா| வாசகத்வமசப்தஸ்ய ஸித்தம் ந ஸ்போட ரூபத:||(21)**

இச்சான்றுகளில் இருந்து தெளிவாவது என்னவென்றால் ஞானத்தை, வாசகம், ஓசை என்று ஏற்பது வேதாந்த பரம்பரைக்கு விரோதமாகாது.

## சப்தபிரம்மம்

ஞானம் வாக்கு வடிவினது. வாசகம் ஆகியது. உலகில் நன்கு அறியப்பட்ட வாசகம் எவ்வாறு தன் வாச்ய (வாக்கினால் கூறப்படும்) பொருளின் மீது ஒளி பாய்ச்சுகிறதோ அதே போல் ஞானமும் தன் அர்த்தத்தின் மீது, விஷயத்தின் மீது ஒளியைப் பாய்ச்சுகிறது. வேதாந்தத்தில் ஞானம் (அறிவு ஞேயம் (அறியப்படுபொருள்) என்ற அர்த்தத்திலும் நாமமும் ரூபமும் ஆகிய சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை முற்பகுதிகளில் கூறப்பட்டன. இப்போது சப்தப்ரம்மத்தின் உண்மை வடிவம் விளக்கப்படுகிறது. பிரம்மம் என்பது சப்த (ஓசை) வடிவினது. அதுவே மூல வாசகம் இது கூறப்படுகிறது.

சாஸ்திரத்தில் பிரம்ம சைதன்யத்தினை சப்தப்ரம்மம் என்று பெயரிடப்பட்டுள்ளது. சாரதா திலக நூலார் ஜடப்பொருளை சப்தபிரம்மமாக ஏற்காமல் சைதன்யத்தையே ஏற்கிறார்.

**சைதன்யம் ஸர்வபூதானம் சப்தப்ரம்மேதி மே மதி: (சா.தி 1/13)**



அதுவே ஓம்காரம் ஆகும். வேதமே சப்தப்ரம்மம் எனப்பட்டது. எனினும், முந்தைய அத்தியாயங்களில் விளக்கப்பட்டபடி, ஆத்ம சைதன்யமே வேதத்தின் உண்மையான சுயவடிவம். பொருளின் மீது ஒளி பாய்ச்சும் வாசகம். சேதனத்தில் (உயிர் உணர்வில்) மட்டுமே இது இயல்வது. ஜடத்தில் அது முடியாது. சைதன்யமே (உயிர் உணர்வே) உண்மையில் வாசகம் ஆகும். அதுவே சப்தப்ரம்மம். ஓசை வடிவினதாவதால் அதாவது, அர்த்தத்தின் மீது ஒளிபாய்ச்சும் சொல் வாசகம் ஆவதால் பிரம்மமே சப்தபிரம்மம் ஆகும். சப்தப்ரம்மம் வேதாந்தத்தில் சகுண பிரம்மம், ஈசுவரர் ஆகிய சொற்களால் கூறப்பட்டுள்ளது.

பிரம்மத்தினை சப்த வடிவினது என்பதன் நோக்கம் என்ன? ஸ்புரதா (பூரிக்கும் இயல்பே) வாக்கு வடிவம் என்று கூறி வந்துள்ளோம். ஆகவே ஞானத்தை, வாக்கு வடிவினதை வாசகம் என்கிறோம். சைதன்யமும் (உயிர் உணர்வும்) ஒளி வடிவினது, பூரிக்கும் இயல்பினது. தானே ஒளிவீசும் சைதன்யமே, அனைத்தின் மீதும் ஒளிபரப்புவது. ஆகவே அது சப்த வடிவினது. அனைத்துக்கும் பெயரானது, வாசகம் ஆனது.

உண்மையில் சைதன்யம் (உயிர் உணர்வு) ஒன்றே ஒளி. வேதம் கூறுகின்றது:- **"தமேவ பாந்தம் அநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வம் இதம் விபாதி"** அதன் ஒளியினால் தான் அனைத்தும் ஒளி பெறுகின்றன. வேதாந்தப் பேச்சின் படி ஒரு பிளவுபடாத சைதன்யமே (உயிர் உணர்வே) மனத்தில் எதிர் ஒளித்து அறிபவர் என்றும், சிறப்பான மேலான மனவிருத்திகளில் பிரதிபலித்து ஞானம் என்றும் கூறப்படுகிறது. ஞானத்தின் ஸ்புரத்தா (பூரிக்கும் இயல்பு) உண்மையில் சைதன்யத்தின் பூரிக்கும் இயல்பே ஆகும் அது விருத்திகள் உடைந்துபோய் சிதறிப்போய் குறுகிய வடிவில், பிளவுபட்ட வடிவில் வெளித் தோன்றுகின்றது. ஆகவே பூரிக்கும் வடிவில் வருவதால் சைதன்யமானது வாக்கு ரூபம் பெறுகிறது. சைதன்யம் ஒன்றே ஒரே தன்னொளி உடையதொன்று என்பதால் அதுவே ஒன்றேயான வாசகம் (ஓசை) ஆகும்.

இப்படைப்புலகினை ஓசை, அர்த்தம் என்று இரு பகுதிகளாகப் பிரிக்க முடியும் என்று முன்பிருந்தே கூறிவந்தோம். இரு பகுதிகட்கும் ஒரு மூல காரணம் ஒன்றேயான, இரண்டற்ற சச்சிதானந்த வடிவினதாகிய பிரம்மமே ஆகும். காரண பிரம்மத்தில் இருந்தே படைப்பில் இரண்டு செல் நெறிகள் (கால்வாய்கள்) துவங்கி ஓடுகின்றன. ஓசை (சப்த) உலகம் என்ற ஒரு கால்வாய். அர்த்தப்பிரபஞ்சம் (பொருள் உலகத்தின்) மூலம் என்ற வடிவில் பிரம்மம் சத்தியமானது என்று சொல்லப்படுகிறது. ஓசை உலகின் மூலம் என்ற வடிவில் அதே பிரம்மம் சப்தப்ரம்மம் எனப்படுகின்றது. அதுவே ஓம்காரம். அதுவே பராவாக்கு (மிக உயர்ந்த ஓசை).

(கட்டுரை தொடரும்)

# கரவருடம் புரட்டாசி மாத ஹிந்துப் பண்டிகைகள்

**2011 செப்டம்பர் 18 முதல் அக்டோபர் 17 வரை**

**செப்டம்பர் 27** மஹாலய அமாவாசை சர்வபித்ரு அமாவாசை **செப்டம்பர் 28** நவராத்ரி ஆரம்பம் **அக்டோபர் 5** சரஸ்வதி பூஜை **அக்டோபர் 6** விஜயதசமி **செப்டம்பர் 21** நாராயண குரு சமாதி நாள், அல்ஜீமியர் நோய் தினம், ஐ.நா. அமைதி - அஹிம்சை நாள் **செப்டம்பர் 22** குருநானக் நினைவு நாள் / ரோஜா தினம் புற்று நோயாளிகள் பால் கவனம் / இரவும் பகலும் சமநீளம் **செப்டம்பர் 23** இந்திர ஏகாதசி **செப்டம்பர் 24** உலக இதய தினம் **செப்டம்பர் 26** உலக காது கேளாதோர் தினம் **செப்டம்பர் 27** அமாவாசை / உலக சுற்றுலா தினம் / பகத்சிங் அமர தினம் **செப்டம்பர் 28** பசுமை நுகர்வோர் தினம் **அக்டோபர் 1** உலக முதியோர் தினம், உலக கானுயிர் வாரம் ஆரம்பம், உலக தாவர உணவு தினம் **அக்டோபர் 2** காந்திஜி பிறந்த நாள், லால்பகதூர் சாஸ்திரி பிறந்த நாள், உலக அஹிம்சை தினம், உலக பண்ணை கால்நடை தினம் **அக்டோபர் 3** உலக குடியிருப்புக்கள் தினம் **அக்டோபர் 5** உலக ஆசிரியர்கள் தினம் **அக்டோபர் 7** பாபாங்குச ஏகாதசி **அக்டோபர் 9** உலக கண்பார்வை தினம், உலக அஞ்சலக தினம் **அக்டோபர் 10** உலக மனநல நாள் **அக்டோபர் 11** ஷரத்பூர்ணிமா **அக்டோபர் 12** ஐ.நா. இயற்கை அழிவு பாதுகாப்பு நாள் **அக்டோபர் 16** உலக உணவு தினம் **அக்டோபர் 17** வறுமை ஒழிப்பு நாள்.


# ஓம்காரத்யானம் (தாரணையில் இருந்து தியானத்திற்கு)

டாக்டர் எச்.ஆர். நாகேந்திரா

ஆனால் நமக்குத்தேவை தூக்கம் அல்ல! தூக்கம் வளர்ச்சியின் முன்னேற்றத்தின் வேகத்தைத் தடை செய்கின்றது. விழித்திருந்து நீங்கள் தொடர்ந்து தியானம் செய்தால் கிடைக்கும் நன்மை இன்னும் அதிகம் ஆகும். பி.எப்.ஆரினை 16% வரை குறைக்க முடியும். ஆகவே தூக்கம் இரண்டாவது இடையூறு ஆகும். விழித்திருங்கள். இதுவே தீர்வு. எப்படி? இது தான் கேள்வி.

மன உறுதி மட்டுமே போதும். தூங்கி விடக் கூடாது என்ற மன உறுதி வேண்டும். தியானத்தின் போது நான் தூங்கி விட மாட்டேன் என்று தனக்குத்தானே யோசனை சொல்லிக் கொள்ள வேண்டும் (ஆட்டோசஜஷன்). பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த யோசனை பயன் தருகின்றது. பல தடவைகளில் அது தவறியும் விடுகின்றது. அப்போது வேகமாக ஜபம் செய்ய ஆரம்பியுங்கள். உங்களுக்குள் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இதுவும் வேலை செய்யவில்லையா, ஜபத்தை உரத்த குரலில் செய்யுங்கள். அல்லது வெளியே வந்து கொஞ்ச தூரம் நடந்து செல்லுங்கள். சிறிது தண்ணீர் குடியுங்கள். கண்களைத் தண்ணீரால் கழுவுங்கள். கபாலபாத்தி, க்ரியாவும், தியானமும் தயாரிப்பில் உதவும் மூன்று பிராணாயாம நெறிகளும் மிகவும் உதவி செய்யும்.

முதலாவது இடையூறு ரஜஸுடன் தொடர்புடையது; இரண்டாவது தமஸுடன். இந்த இரண்டையும் கடந்து நீங்கள் சத்துவத்திற்குச் செல்ல வேண்டும். அமைதியும், விழிப்புணர்வும் இணைந்த நிலை அதுவே. முன்னெச்சரிக்கையுடன் கூடிய ஓய்வுணர்வு அது விரிவடைந்த நிலை அதுவே!



ஜபத்தின் வேகம் குறையும்போது, உடல் முழுவதும் அதிர்வுகளை உணர்வீர்கள். நாத அதிர்வினை (ரெசோனன்ஸ்) உணர்வீர்கள். ஓம் அலைகட்கு இடைப்பட்ட நிசப்தத்தைத் தொட்டுணர்வதில்தான் மேற்கொண்டு நீங்கள் தியானத்தில் முன்னேற்றம் அடைவது அடங்கி இருக்கின்றது.

மனத்தில் நீங்கள் ஒவ்வொரு தடவை ஓம் ஐத் திரும்பத் திரும்ப உச்சரிக்கும் போதும் ஒலி அதிர்வுடைய அலை மேலெழும், தணியும். நாத அதிர்வின் அடுத்த அலை தொடங்குமுன் மௌனமும் (நிசப்தமும்) அறிவு பூர்வமாக அலசிப் பார்த்தாலும் தொடங்குகின்றன. அந்த இடைவெளியை நிசப்தத்தை உணர்ந்து பாருங்கள். அதுவே ஆனந்தம் இருக்கும் இடம். திரும்பத் திரும்ப அதனைத் தொட்டுணருங்கள்.

அப்புறமும் கூட இடைஞ்சல்கள், மனம் அலைவது இருக்கலாம். இனிய இடைஞ்சல்கள் மனத்தை ஜபத்தில் இருந்து அப்புறப்படுத்தி விடும். தியானம் செய்யும் ஒருவர் (அமெரிக்காவில்) தன் ஆசிரியரிடம் கூறினார். "நான் தியானத்தை நன்கு ரசிக்கிறேன். ஆசிரியர் கேட்டார் "தியானத்தில் என்ன செய்கிறீர்கள்?" "ஓ நான் உட்கார்ந்து, உடலை விட்டுப் பறந்து வெளியே போகிறேன். மிதந்து வயல்கள், மலைகள் ஆகாயம் வழியே ஒரு அழகிய பூங்காவுக்குச் செல்கிறேன். மலர்கள் அங்கே இருக்கின்றன. குழந்தைகள் அப்பூங்காவில் சிரித்து விளையாடுகின்றன. என் நண்பர்கள் நீண்ட நேரம் அரட்டை அடிக்கிறார்கள். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு நான் என் உடலுக்குத் திரும்புகிறேன்" என்றார்.

பகற்கனவு காண்பது தியானம் ஆகாது. நீங்கள் விரும்பும் எண்ணங்கள், தேர்ந்தெடுத்த எண்ணங்கள் உங்களை ஜபத்தில் இருந்து புறம் தள்ளிக் கொண்டு போய்விடுகின்றன. நீங்கள் வெறுக்கும் எண்ணங்களைப் போலவே, விரும்பும் எண்ணங்களும் மனத்தை அலைக்கழிப்பவையே. தீவிர விருப்பு வெறுப்புக்கள் உங்களை தியானத்தில் இருந்து விலகிவிடச் செல்கின்றன. இந்த இடைஞ்சல்களை நீங்கள் தாண்டிச் சென்றாக வேண்டும். மீண்டும் பழைய தந்திரத்தையே கையாளுங்கள். ஓம் ஓதுவதை வேகம் பெறச் செய்யுங்கள். நாத அதிர்வுகளை நன்கு உணர்ந்து பாருங்கள். நாத அதிர்வின் அலைகளை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

### இன்னொரு இடைஞ்சலும் வரும்:

தியானத்தில் அமர்ந்த உடனே, சில நிமிடங்கள் ஜபம் நன்கு நடக்கின்றது. ஆனால் சாதகர் விரைவில் தர்க்கம் செய்து பகுத்தறிவை அலசிப் பார்க்கவும் ஜபத்தின் பொருள் ஓம்காரத்தின் பொருள் இவற்றைப் **புரிந்து** கொள்ளவும் முயற்சி செய்யத் தொடங்குவார். ஓம் என்பதில் அ,உ,ம இருக்கின்றன. அவை விழிப்பு, கனவு, கனவற்ற உறக்கம் இவற்றைக் குறிக்கும் என்றெல்லாம் ஆராயத் தொடங்குவார். அவை, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றைக் குறிக்கும் என்றெல்லாம் சிந்திப்பார். வேறு பெரிய இடைஞ்சல்கள் அலைக்கழிப்பு எதுவும் கிடையாது. இது நல்லதா?

விடை:- இந்த மாதிரியான அலைக்கழிப்புகள் எதேச்சையாக தாறுமாறாக இல்லாமல் இருப்பது நல்லது தான். அறிவு பூர்வமான ஆராய்ச்சி மனத்தின் சஞ்சலத் தன்மையை விலக்கும். உறக்கத்தைத் தள்ளி வைக்கும். இது

வரை அது நல்லது தான். ஆனால் இந்த அறிவுமயமாவதும் நிறுத்தப்பட வேண்டியதே! அப்போது தான் நீங்கள் முன்னேறி ஆழம்பெற முடியும். இதற்கும் தீர்வு முன் சொன்னதுதான். வெறும் முன் முன்தயாரிப்பற்ற மன அலைக்கழிப்பினை மதிக்காதது போலவே இந்த தர்க்க ஆராய்ச்சி எண்ணங்களையும் மதிக்காதீர்கள். புறக்கணித்து வாருங்கள். ஜபத்தின் வேகத்தை அதிகரியுங்கள். ஜபத்தின் பொருளை உணர்ந்து, ஜபநாத அதிர்வினை உணர முயலுங்கள். ஜபங்களின் இடையில் நிசப்தத்தைக் காணுங்கள்.

நிசப்தம் என்பது, செயலின்மை அல்ல! தேக்க நிலை அல்ல! பாதையைக் குறுக்குவது அல்ல! நிசப்தத்தில் இவை இருந்தால் அவற்றை விலக்க வேண்டும். விரிவாக்குவதே வழி. விழிப்புணர்வை உண்டாக்கி, விரிவான, ஆனந்தமயமான விழிப்புணர்வை பெறுவதே நோக்கம். முறைப்படியான முன்னேற்றம் பெற. ஏற்றம் இறக்கம் எனும் நெறிமுறையே உதவி செய்யும்.

**விரிவாதலும் விழிப்புணர்வும்:**

தியானத்தில் நாம் மனம் குவிவதைக் கலையச் செய்கிறோம். விரிவடைய முயல்கிறோம். ஒரு புள்ளியிலான விழிப்புணர்வில் இருந்து, நீள்கோட்டில் விழிப்புணர்வும், பிறகு அதில் இருந்து முப்பரிமாண விழிப்புணர்வும் பெற முயல்கிறோம். ஒற்றைப் பரிமாணத்தில் இருந்து முப்பரிமாணம் அடைய முழு உடலையும் பற்றிய விழிப்புணர்வு பெற முயல்கிறோம். ஓம் எனும் ஓசையை உரக்க ஒலிப்பது முழு உடலையும் பற்றிய விழிப்புணர்வு பெற உதவுகிறது. நாம் ஆழ்ந்து செல்லச்செல்ல, சூக்கும நிலையை எட்ட எட்ட, நாம் ஜபத்தை மனத்தில் ஒலிக்கச் செய்யும் போதே கூட நாத அதிர்வினை அனுபவிக்கலாம். இது தான் முப்பரிமாண விழிப்புணர்வு எனப்படும். நம் கவன சக்தி ஒரு புள்ளியில் இருந்து பரவி படிப்படியாக முப்பரிமாண உணர்வினை, உடல் முழுவதுமான உணர்வினை எட்டுகிறது. இதுவே விரிவடையும் நெறிமுறை.

**இறக்கம்:**

முப்பரிமாண விழிப்புணர்வில் நிலைபெற்று உடல் முழுவதையும் ஓம் இன் அலைகள் சூழ்ந்து கொள்வதை உணர முற்படுங்கள். இப்போது, ஓம்காரத்தின் அலையின் இறங்கும் பகுதி மெள்ள மெள்ள இறங்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். இந்த இறக்கத்தின் முடிவில் நிசப்தத்தில் ஸ்பரிசத்தைத் (தொடுவதை) உணர முயலுங்கள். ஓம்காரத்தின் ஒவ்வொரு அலையின் இறக்கத்தின் முடிவிலும் கிட்டும் நிசப்தத்தைத் தொடுவது, சாதகர் இன்னும் இன்னும் ஆழமான நிலையை எட்ட உதவும்.

**ஏற்றம்:**

பிறகு அலையின் ஏறுமுகமும் விரிவடைய அனுமதியுங்கள். பிறகு அந்த அலை இறங்கி நிசப்தத்தில் முடியட்டும். நீங்கள் முன்னேற முன்னேற நிசப்தம் நீண்டு கொண்டே போகும்.

விரிவாகும் உணர்வே, நலவாழ்வு, இலேசாக இருக்கம் உணர்வு, ஆனந்தம் இவற்றுடன் கூடியதாகும். விரிவாகும் உணர்வு அதிகமாக அதிகமாக, ஆனந்தம் அதிகரிக்கும். தியானம், சமாதி எனும் அதீதப்ரஜ்ஞையில் போய் நிறைவடைகிறது. அது பிரஜ்ஞையின் மேல் நிலையில் தாவிக் குவிப்பதாகும். மேலும் சூக்குமமான விரிவான பிரஜ்ஞைத்தளத்தை சாதகர் எட்டுகின்றார். அதுவே முன்னேற்றம் / வளர்ச்சி.

ஜபத்தின் இரண்டு அலைகட்கு நடுவில் நிசப்தத்தை அனுபவித்து உணர்வது உடலானது, முப்பரிமாண விழிப்புணர்வில் இருந்து, அனைத்தையும் ஊடுருவும் விழிப்புணர்வு நிலையை எட்ட உதவுகிறது. மேலும் மேலும் விரிவடைய, அழகிய நீல வானத்தையோ எல்லையற்று விரிந்த கடலையோ நினைப்பது, உதவும். தேக்க நிலை அனைத்தையும், தூக்கம் இவற்றையும் உடைத்து வெளிவர வழி விரிவாக்கமே.

வளர்ச்சி நெறிக்கு உதவும் வண்ணம், தூய்மைக்கான பயிற்சிகளான க்ரியாக்களைப் பயிலலாம். தயாரிப்பாக பிராணாயாமம் பயிலுவதும் வழக்கம். ஓம்காரத்யானத்தில் இந்த கட்டங்களை ஒன்றிணைத்து ஒருங்கிணைந்த, ஒழுங்கான வேகமான வளர்ச்சிக்கு உதவும் வண்ணம் ஒரு பயிற்சியை வடிவமைத்திருக்கிறோம்.

பின்வரும் அட்டவணையைக் காண்க

**ஓம்கார தியானத்தின் படிப்படியான நிலைகள்**

| | |
|---|---|
| 1. தூய்மைப்பயிற்சி | கபாலபாத்தி 1 நிமிடம் (120 தடவைகள்)<br>(நாசிகளை மாற்றி மாற்றி) |
| 2. தயாரிப்பு | பிராணாயாமம்<br>நாடிசுத்தி 5 சுற்றுக்கள்<br>ஸதந்தா 5 சுற்றுக்கள்<br>ப்ராமரி 5 சுற்றுக்கள் |
| 3. தாரணை | இரண்டு தடவைகள் |
| 4. தியானம் – படிநிலை (1) | ஜபம் 5 நிமிடங்கள் ஜபம் செய்க<br>ஜபத்தின் வேகத்தைக் குறைத்தால் 5 நிமிடம்<br>ஜப அதிர்வுகளை உணர்தல் 3 நிமிடங்கள் |
| படிநிலை (2) | இறக்க நிலை 3 நிமிடங்கள் |
| படிநிலை (3) | ஏறுமுகம் 3 நிமிடங்கள் |
| படிநிலை (4) | நிசப்தம் / சமாதி 3 – 5 நிமிடங்கள் |

**அனுசந்தானம் நாள் முழுவதும்**

அடித்தளமாகிய நிசப்தம் மேலும் மேலும் ஆழமும் விரிவும் அடைந்து நிசப்தப் பெருங்கடல் ஆகும். மேல்மட்டத்தில் அலைகள் இருக்கும். முழுவதுமான நிசப்தமாகிய – அஜபா – வில் இணைந்து விடுக. மொத்தம் 30 நிமிடப் பயிற்சி.

**அனுசந்தானம்:**

ஆரம்பத்தில் அரைமணி நேரம் முறைப்படி ஓம்கார தியானம் செய்த பின் நேரத்தைக் கூட்டலாம். தியானம் செய்பவர் இலேசாக இருப்பதாக உணர்தல், நிசப்தம், ஆனந்தம் இவற்றை நாள் முழுவதும் பரவியதாக உணர முடியும். பல தடவை ஓம்காரத்தை உச்சரித்து இவ்வனுபவத்தை நினைவு கூரலாம்.

(கட்டுரை தொடரும்)

## அருப்புக் கோட்டையில் அன்னபூஜை



அருப்புக்கோட்டை கேந்திரக்கிளை நடத்திய அன்னபூஜை ராமசாமி நகர் சாரதாம்பாள் கோயிலில் நடைபெற்றது. ஸ்ரீராமலிங்கா மில்ஸ் சேர்மன் டாக்டர் டி.ஆர். தினகரன் தலைமை வகித்தார். கேந்திரத் தொண்டர்கள் சாரதா, திருமதி கனகாம்பரம், நாகசாமி, ஜோதி ஆகியோர் பூஜையை நடத்தினர். 13 மூடை அரிசி சேமிக்கப்பட்டு கேந்திரப் பணிகட்கு வழங்கப்பட்டது. விழா ஒருங்கிணைப்பு திரு பேச்சியப்பன், கேந்திரப் பொறுப்பாளர்.

## சுவாமி விவேகானந்தர் 150-ம் பிறந்த நாள் விழா முன்னேற்பாடுகள்

அருப்புக்கோட்டை பாரதி பாலர் பள்ளியில் கேந்திரம் நடத்திய விழாவில் அன்பர்கள் லக்ஷ்மணன் அய்யா, உதவித்தலைமை ஆசிரியை உமாமகேஸ்வரி, பேராசிரியை மீரா, செயலர் எஸ். ஐயப்பன் ஆகியோர் விழா நடத்தும் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொண்டனர்.



# நசிகேதமன்றம்

ஏ. முருகம்மாள், நரையப்பபுரம், நெல்லை மாவட்டம்

### 1727) கோவிலில் சுவாமி சன்னிதானத்திற்கு எதிராக நின்று வணங்கக் கூடாது என்று சொல்லப்படுகிறது. ஏன்?

மரியாதைக்குரிய தெய்வ வடிவங்களையும், மாமனிதர்களையும் நேருக்குநேர் நின்று பார்க்கின்ற வழக்கமில்லை. சில தெய்வத்திருமேனிகளின் கண்பார்வையின் உக்கிரத் தன்மையைத் தாங்கிக் கொள்கிற சக்தி மனிதர்கட்குக் கிடையாது என்பதால் அவற்றின் முன் கருடன், நந்தி, பிள்ளையார் ஆகியவர்களின் சிலைகளை நிறுவியிருப்பார்கள். கடைக்கண் பார்வை அன்பு மிகுந்ததாகவும், அருளின் வெளிப்பாடாகவும் கருதப்படுவதால் பக்கவாட்டில் நின்று, அல்லது நேர்கோட்டில் இருந்து சற்று விலகி இருந்து தரிசனம் செய்வதே வழக்கமாக இருக்கிறது.

என். செல்வி, ஆனைக்குளம், நெல்லை மாவட்டம்

### 1728) கொடிமரத்தின் முக்கியத்துவத்தை விளக்குக?



கொடிமரம் என்பது திருக்கோவில் வழிபாட்டில் ஒரு முக்கியமான பகுதி ஆகும். யாகங்களில் நாட்டப்படும் யூபஸ்தர்பம் எனும் தூண் தான் பிற்காலத்தில் கொடிமரமாக ஆயிற்று என்பார் உண்டு. யூபஸ்தம்பம் என்பது பலி கொடுக்கப்படும் மிருகத்தைக் கட்டி வைத்திருக்கும் இடமாகும். கொடிமரம் அருகே பலிபீடம் என்பது இன்றும் கோயில்களில் அமைந்திருக்கும். அதில் போடப்படும் சோற்று உருண்டை நிவேதனத்தை பலி என்றே அழைப்பார்கள்.

யூபஸ்தம்பமே பிற்காலத்தில் சிவலிங்கமாயிற்று என்பாரும் உண்டு.

ஆரம்ப காலத்தில் ஸ்தல மரத்தையோ, மரத்தடியையோ, இறைவடிவமாக வழிபட்டதில் இருந்து கொடிமரம் முக்கியத்துவம் பெற்றிருக்கக் கூடும்.

கொடிமரம் என்பது இறைவன் உலகில் மன்னன் என்ற கருத்தில் அவர் வாகனமோ, அவருக்கு உரிய உயிரினமோ சின்னமாகப் பறக்க வைக்கப் பயன்படுகிறது. பிள்ளையாருக்கு மூஞ்சூறுக் கொடி, விஷ்ணுவுக்கு கருடக்கொடி,

சிவனுக்கு ரிஷப (காளைக்) கொடி, தேவிக்கு சிங்கக்கொடி. முருகனுக்கு சேவல் கொடி இப்படி. திருக்கோயில் ஆலய அமைப்பில் ஆலயமே ஒரு மனிதனைப்போல்வது என்று கூறி ஆலயத்தின் பகுதிகளை மனிதனின் உடலுறுப்புக்கட்கு ஒப்பிடுவர். கொடிமரம் முதுகெலும்பு போல் கணுக்களுடன் அமைத்திருக்கும்.

கொடிமரம் இருக்கும் கோவில்களில் உற்சவமும் சுவாமி புறப்படும் நிச்சயம் இருக்கும்.

துளசிதாசர் ராமனின் புகழை ஒரு கொடியாகவும் லஷ்மணனை அக்கொடியைத் தாங்கி நிற்கும் கொடிமரமாகவும் உருவகப்படுத்தி, அனைவரும் கொடியை வணங்குவர், கொடிமரத்தை யாரும் வணங்குவதில்லை என்பார். லஷ்மணனின் சுயநலமற்ற ராமபக்திக்கு கொடிமரம் உதாரணம்.

கொடிமரப் பிரதிஷ்டையைக் கும்பாபிஷேகம் போல் சிறப்பாகக் கொண்டாடுவர்.

சிவாலயங்களில் தரிசனம் முடிந்த பின்பும், விஷ்ணு ஆலயங்களில் தரிசனம் செய்யும் முன்பும் கொடிமரத்தடியில் வீழ்ந்து பக்தர்கள் வணங்குவர்.

கோயிலைக் கட்டி வைத்த மன்னனோ, தனவந்தரோ கொடிமரத்தடியில் நமஸ்காரம் செய்வது போல் தம் உருவத்தைப் பதிப்பதும் உண்டு. பக்தர்களின் பாதத்தூசி தம் மேல் படவேண்டும் என்றும், பக்தர்கள் இங்கே கீழே விழுந்து வணங்க வேண்டும் என்றும் விரும்பி கிடந்த நிலையில் அவ்வுருவங்கள் பதிக்கப்படும்.

சிவகிரி பாலசேவிகா, கோவில்பட்டி கேந்திரக்கிளை

### 1729) ஒரு மனிதனின் ஒழுக்கம் எனப்படுவது எது?

ஒரு மனிதன் எப்படி நடந்து கொண்டால் அவன் உடல், மன, அறிவு, ஆன்மீக சக்திகள் முழுமையாக வெளிப்படுமோ அது நல்லொழுக்கம். பிற தீயொழுக்கம். ஒரு மனிதனின் **அடிப்படை** இயல்புக்கேற்ப நடந்து கொள்வது நல்லொழுக்கம். தன்னெஞ்சே அறிய இயல்புக்கு மாறாக நடப்பது தீயொழுக்கம். ஒரு மனிதர் எப்படி நடந்து கொண்டால் தனக்கும், பிற உயிர்கட்கும், உலகில் உள்ள அனைத்துக்கும் நன்மை கிட்டுமோ அது நல்லொழுக்கம், மற்றவை தீயொழுக்கம். பிறர் உங்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ அப்படி நீங்கள் பிறரிடம் நடந்து கொள்வது நல்லொழுக்கம். பிற தீயொழுக்கமே. இப்படி மனித வாழ்வின் சிறப்பொழுக்கங்களை சலித்துச் சலித்துப் பார்த்து, பதஞ்சலி, கிருஷ்ணன், புத்தர், நீதி நூல்கள், திருக்குறள் அண்மைக்காலத்தில் காந்திஜி ஆகியோர் ஒழுக்க விதிகளை வகுத்துக் கொடுத்துள்ளனர். அவையாவன (1) அஹிம்சை (2) சத்தியம் (3) திருடாமை (4) புலனடக்கம் (5) அதிகச் சொத்துச் சேர்க்காத எளிமை (6) அக, புறத்தூய்மை (7) போதும் என்ற மனம் (திருப்தி) (8) தவம், கடும் முயற்சி (9) இறைப்பிரார்த்தனை (10) நன்னூல் ஓதுதல்.

இந்த நற்குணங்கள் அடிப்படையில் நல்லவை என்பதும் மட்டுமின்றி வரலாற்று நீதியாகவும் பல்லாயிரம் ஆண்டுகளாக நல்லவர்களின் மனம் இந்தக் கால்வாய்களில் ஓடிஓடி, பல தலைமுறைகளை இவற்றுக்குப் பழக்கப்படுத்தியிருக்கிறது. உலகில் உள்ள அனைத்து மதங்களும் இவற்றைக் கிட்டத்தட்ட ஏற்கின்றன.

ஆர். லதா, நாகலாபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

### 1730) ஆன்மீகத்தில் ஈடுபடுவதற்கக் கல்வி மட்டும் போதுமானதா?

அக்கல்வி இறைவனோடு சேர்த்து வைக்கும் வழிகாட்டினால் மட்டுமே அக்கல்வி போதுமானது. திருவள்ளுவப்பெருமான் கல்வியின் பயன் கடவுளைக் காண்பதே என்கிறார்.

வியாசர், யாஜ்ஞுவல்கியர், ஆதிசங்கரர், அண்மைக்காலத்தில் வினோபாஜி போன்ற மாமனிதர்கள் மிகச்சிறந்த கல்வியறிவு பெற்றுத் திகழ்ந்திருக்கிறார்கள்.

மாறாக கண்ணப்பநாயனார், நந்தனார், கபீர்தாசர் போன்ற கல்வியறிவே பெறாத ஆனால், இறையருள் பெற்ற, அற்புதர்களை மாபெரும் கல்வியாளர்களும் கொண்டாடிப் போற்றியுள்ளனர். இக்காரணத்தினால் தான் திருவள்ளுவர் இறைவன் திருவடியைத் தொழுக் கற்பிக்காத கல்வி பயன் அற்றது என்கிறார்.

பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர், குமரி மாவட்டம்

### 1731) மகாத்மா காந்தி சிரவணன் கதையைப் படித்து பக்திமான் ஆனார் என்கின்றனர்? இந்த சிரவணன் யார்? அவன் கதை என்ன?




இக்கதை பற்றிய மூலப்புராணக்கதை கொஞ்சமாகவும், அது பற்றிய செவிவழிச்செய்திகள் அதிகமாகவும் உள்ளன. வால்மீக ராமாயணத்தில் தசரதர், தன் மகன் ராமனை வனத்துக்கு அனுப்பிவிட்டுப் புலம்பும் போது கௌசல்யா தேவியிடம் தன் பழங்கதை ஒன்றைச் சொல்லி அழுகிறார். தசரதனின் இளமைப்பருவத்தில் அவர் வேட்டையாட சரயூ நதிக்கரைக்குச் செல்கிறார். விலங்குகளின் ஓசையைக் கேட்டு, அப்பக்கம் அம்பு எய்வதில் வல்லவனான தசரதன் ஓரிடத்தில் ஒரு யானை தண்ணீர் குடிக்கும் ஒலி வருவதாக எண்ணி அத்திசையில் அம்பெய்கிறார். அது சிரவணன் என்ற ஆசிரமவாசியின் மீது பட்டு

அவன் ஓலமிடுகிறான். தசரதன் அங்கு ஓடிப் போய்ப் பார்க்கும் போது, சிரவணன் பானையில் தண்ணீர் மொள்ளும் ஓசையே தான் கேட்டது என்று அறிந்து கொள்கிறார். சிரவணனின் பெற்றோர்கள் முதியவர்கள். பார்வை இழந்தவர்கள். அவர்களுக்குத் தொண்டு செய்து செய்து செய்து தந்தை தாய்க்கு பக்தி என்றால் அதற்கு இலக்கணம் சிரவணன் தான் என்றாகி விட்டது. தசரதன் சிரவணனின் பிணத்தைத் தூக்கிக் கொண்டு ஆசிரமத்துக்குப் போய் அதற்கு எரியூட்டுகிறார். மகனை இழந்த பெற்றோர்கள், தசரதனும் தங்களைப் போல் மகனை இழந்து துன்புறுவார் என்று சாபம் கொடுத்து விட்டு மகனுடன் சிதையேறி மரணம் அடைகின்றனர். அதே போல் தசரதனும் தன் அருமை மகன் ராமனைப்பிரிந்து மரணம் அடைகின்றார்.

பல செவிவழிச் செய்திகளில் சிரவணன் காவடி போன்று இரண்டு பெரிய தட்டுக்களில் கோலை இணைத்து அதில் தன் பெற்றோர்களைச் சுமந்து கொண்டு, பல தீர்த்தங்களுக்குப் போய் வருவதாகக் கதை உண்டு. இதனால் தங்கள் மகன் தங்களிடம் அன்பு செலுத்த வேண்டும் என்று விரும்பும் பெற்றோர்கள் மகனுக்கு சிரவணன் என்று பெயரிடும் வழக்கம் உண்டு.

சுவாமிஜி பக்தன், கோவை ராமகிருஷ்ண மிஷன் இளைஞர் முகாம்

**1732) தீவிரவாதம் உருவாவதற்குக் காரணம் என்ன?**

(1) வன்முறை மூலம் சமுதாயத்தில் மாற்றங்களைக் கொண்ட வந்து அம்மாற்றங்களை நிலைக்கச் செய்து விடலாம் என்ற முட்டாள்தனமான நம்பிக்கை (2) தன் மதம், தன் கொள்கை, அவற்றை நடைமுறைப்படுத்துவதில். தன் வழியே சரியானது என்ற குறுகிய மனப்பாங்கு (3) சகிப்புத் தன்மையின்மை (4) சமுதாயத்தில் பரவலாகக் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், அநியாயங்கள் (5) அரசின் மெத்தனம் (6) பொதுமக்களின் ஆர்வமின்மை (7) சில வன்முறையாளர்கள் சேர்ந்து பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களைக் கட்டுப்படுத்தி விடலாம் என்ற எண்ணம் (8) வன்முறைப்போக்கை, இளைஞர்களுக்கு மூளைச்சலவை செய்து திணிக்கும் அமைப்பு முறைகள், கொள்கைகள், மரபுகள் - இவை அனைத்தும் சேர்ந்து தீவிரவாதத்தை உருவாக்குகின்றன. சிலநாடுகளில் வெறும் கொள்ளை கூட்டங்கள் தீவிரவாதப் போர்வையில் பணம் சம்பாதிப்பதும் உண்டு.

சாஸ்த்தா பல்கலைக்கழக நிர்வாக இயல் மாணவர், தஞ்சாவூர்

**1733) நான் சிறு விஷயங்களில் கூட தீர்மானமான முடிவுகள் எடுக்க இயலாதவராக இருக்கிறேன். தீர்மானம் எடுப்பது, உறுதியாக இருப்பது இவற்றிற்கு என்ன முக்கியத்துவம்?**

நீண்ட அல்லது குறுகிய கால அடிப்படையில் பணிகள் செய்வதற்கு மனஉறுதி அவசியம். எது தவறு எது சரி என்றறிந்து அவற்றின்படி நடக்க, தீர்மானம் செய்யும் சக்தி அவசியம். நல்லது கெட்டது பிரித்து அறியும் அறிவு தான், ஒழுக்கத்தில் நீதிநெறியில் அடிப்படி. தான் சரியென்று கண்டதன்படி நடப்பது தான்

வாழ்க்கையில் முன்னேற வழி. எது சரி எது தவறு என்றறிய, தானே சிந்திப்பது, அறிவாளிகளின் உதவியை நேரிலோ, புத்தகங்கள் மூலமோ நாடுவது இவையும் உதவும். இவையெல்லாம் புற உலக வாழ்க்கைக்கு.

அக உலகில் சங்கல்ப சக்தியற்றவர், மனஉறுதியற்றவர் எதிலும் தீர்மானம் எடுக்க இயலாதவர் மனம், உணவு மூச்சு இவற்றின் சக்தியைப் பெரிதும் வீண் செய்கிறார்.

சமூகத் தொண்டர் பயிற்சியாளர்

**1734) சக்தி வழிபாடு வேதகாலத்தில் இருந்து தோன்றியது என்றால் அது பிறநாடுகளில் பரவாமல் இருக்கக் காரணம் என்ன?**

சக்தி வழிபாடு உலகின் பல நாடுகளிலும் பரவி இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. ஆன் பேரிங், ஜூல்ஸ் காஷ்ஃபோர்டு என்ற இரு பெண் ஆராய்ச்சியாளர்கள் வடக்கு ஆப்ரிக்கா மற்றும் ஐரோப்பாவில் இருந்து மறைந்த தாய்த்தெய்வ வழிபாடு பற்றி "தி மித் ஆஃப்த காட்டெஸ்" என்றொரு நூல் எழுதியுள்ளனர். கார்ல்யுங் என்ற ஆஸ்திரிய மனோதத்துவ ஆராய்ச்சியாளர் தான் எழுதிய மூல மனப்படிவங்கள் (ஃபோர் ஆர்க்கிடைப்ஸ்) என்ற நூலில் மனித குலம் முழுவதும் தாய் வடிவப் பெருஞ் சக்தியை வழிபடும் போக்கு இருந்ததைக் குறிப்பிடுகிறார்.



புதிதாகத் தோன்றும் மதங்கள், ஆதிக்க உணர்வுள்ள மதங்கள், இயற்கையைப் போற்றாத மதங்கள், தர்க்கத்திற்கு அதிக முக்கியத்துவமும், அடிப்படை உள்ளுணர்வுகட்கும் குறைந்த முக்கியத்துவமும் கொடுக்கம் மதங்கள். சிந்தனைப் போக்குகள் இவற்றிலும் தாய்த்தெய்வ வழிபாடு இல்லை. இந்த கொள்கைகளும் மதங்களும் பரவிய நாடுகளில் எல்லாம் ஏற்கெனவே எங்கு வேர் கொண்டிருந்த தாய்த் தெய்வ வழிபாடு அழிக்கப்பட்டது. அல்லது பின்னுக்குத் தள்ளப்பட்டது.

சென்னை கேந்திர இளைஞர் முகாமினர்

**1735) ஒரு எண்ணமும் ஒரு கர்மமா? தீய எண்ணங்களைத் தவிர்ப்பது எவ்வாறு?**

சக்தியைச் செலவு செய்வது எல்லாம் கருமங்கள் தான். தான் எனும் அகவய உணர்வில் இருந்து எழும் செயல்பாடுகள் எல்லாம் கருமங்கள் தான். இச்செயலின் விளைவுகளை நான் அனுபவிப்பேன் என்ற உணர்வில் எழும் எல்லா மன அசைவுகளும் கர்மங்கள் தான். ஆகவே ஒவ்வொரு எண்ணமும் ஒரு சூக்கும கருமமே. அன்னை சாரதா தேவியார், இந்தயுகத்தில் எண்ணங்களினால் செய்யப்படும் தவறுகள் மன்னிக்கப்பட்டு விடும் என்கிறார்.

மனத்தில் கெட்ட எண்ணங்கள் தோன்றும் போது, உரத்த குரலில் இறை நாமத்தை ஓதுவது, மனம் உட்பட உடலின் அனைத்துப் பகுதிகளிலும் முயற்சி தேவைப்படும் நற்செயல்கள், நல்லெண்ணங்கள் இவற்றில் ஈடுபடுவது மிகவும் உதவும்.

தான் பவுண்டேஷன் பயிற்சியாளர்கள்

**1736) பாரதப் பொருளாதாரம் விரைந்து வளரும் போது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பணிகள் முக்கியத்துவம் பெறுமா?**

1. ஆசியாக்கண்டத்திலும் அதிலும் பாரதத்தேசத்திலும் ஏற்படும் பொருளாதார வளர்ச்சி ஏழைகளைப் புறந்தள்ளுவதாகவே அமைகின்றது என்று சில பொருளாதார அறிஞர்கள் கூறுகின்றனர். இத்தகைய பொருளாதார வளர்ச்சியில் நியாயத்தைப் புகுத்த, தொண்டு நிறுவனங்கள் உதவும்.

2. கல்வி, சமுதாய உறவுகள், மனநலன், பண்பாடு ஆகிய பல துறைகளில் தொண்டு நிறுவனங்கள் பெரும்பணி ஆற்ற முடியும்.

3. சமுதாயத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி நெறிகளே, பணக்காரர்களுக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்களை உற்பத்தி செய்வதில் ஏழைகளை ஈடுபடுத்தி அதன் மூலம் ஏழைகட்டு, சம்பளம், பொருளாதார மேம்பாடு என்னும் பெயரில் உலவுகின்றன எனும் பேச்சு உலகில் பரவலாக நடக்கிறது. உலக வங்கி, மாசுபடுத்தும் தொழில்களை ஏழை நாடுகளில் துவங்கி, அவற்றின் உற்பத்திப் பொருள்களை பணக்கார நாடுகள் நுகர்வது என ஒரு திட்டம் கொண்டு வந்தது. அதை எதிர்த்து ஒரு துணைத் தலைவர் பதவி விலகினார். உற்பத்திப் பணியில் பொதுமக்கள் பரவலாக ஈடுபட்டால் மட்டும் போதாது. அவர்கள் நுகரும் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.

எல்லாவற்றையும் விட, அதிக முக்கியத்துவம் பெறும் விஷயம் ஒன்று உண்டு. தொண்டன் என்பவன், பரிசு ஊக்கத்தொகை கொடுத்தோ, தண்டனை கொடுத்தோ சமுதாயத்தை நடத்திச் செல்ல மாட்டான். "ஸாமம்" எனப்படும் நல்லறிவுரைகள் மூலம் மக்கள் மனத்தைச் செம்மைப்படுத்தி, நல்ல எண்ணங்களை மக்கள் ஏற்கவைக்கும் பணிக்கு, உலகம் உள்ளவரை தேவை உண்டு. அத்தகைய தொண்டர்களும், தொண்டு நிறுவனங்களும் ஒரு நாளும் செல்லாக்காசுகள் ஆகமாட்டார்கள்.

வி. அருணா, சென்னை

**1737) நாம் இழந்து விட்ட வேதகாலச் செயல் நெறிமுறைகளை மீண்டும் பெற வழி என்ன?**

இருப்பவற்றையாவது காப்பாற்றிப் பயன்படுத்துவது, அவற்றை ஆதரிப்பது முதல் வழி. நாம் இழந்து விட்ட பண்பாட்டுக்கூறுகளை ஏட்டுச் சுவடிகளில் இருந்தும், சில சில அறிஞர்களிடம் இருந்தும் மீட்டு உயிர்பெறச் செய்ய பலர் முயற்சிகள் செய்கின்றனர். அவர்கட்கு உதவலாம்.

## அம்பா சமுத்திரம் ஒளி வெள்ளத்தில்

அம்பா சமுத்திரம் அகத்தியர் கோவிலில் கேந்திரம் நடத்திய மாபெரும் திருவிளக்குப்பூஜையில் 881 மகளிர் பூஜை செய்தனர். கேந்திரத் துணைத்தலைவர் குமாரி பி. நிவேதிதா, செயலர் எஸ். அய்யப்பன் சிறப்புரை ஆற்றினர். மாணவிகட்கு கல்வி உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. பத்தமடை சிவானந்த ஆசிரமத்து சுவாமிகள் ஆசி வழங்கினர். ஆயுட்கால தொண்டர் பயிற்சி பெறும் 40 பேர் பங்கேற்றனர். விழா ஏற்பாடு, தகவல், பூஜை திருமதி என். ஜானகி புஷ்பம், சந்திரா, சி. சரஸ்வதி மற்றும் பாலசேவிகாக்கள்.

## வல்லவர்களை உருவாக்கும் வல்லன்குமாரன்விளை முகாம்

குமரி மாவட்டம் வல்லன் குமாரன் விளையில் 37 மாணவ மாணவியர் பங்கேற்ற ஆளுமைப்பயிற்சி முகாமிற்கு அரசு மேல்நிலைப்பள்ளி உதவி அளித்தது. ஆசிரியை தமயந்தி, உதவித் தலைமை ஆசிரியை திரு பா. அனந்த கிருஷ்ணன், திரு போஸ், திருமதி பத்மாவதி ஆகியோர் சிறப்புரை ஆற்றி முகாமினை நடத்தினர். பஜனை, யோகா, கைவினைப் பயிற்சி, பாடல் பயிற்சிகள், விளையாட்டுக்கள் சிறப்பாக நடைபெற்றன. ஒருங்கிணைப்பும் தகவலும் திருமதி டி. பத்மாவதி.

*With Best Compliments from*

**S.CHANDRASEKAR**

**UNISCAFF ENGINEERS**

(Designer / Manufacturer of Centering, Shuttering & Scaffolding Systems)

**No.35, Gangai Amman Koil Street, (Opp. to Padmaram Mahal) Vadapalani, Chennai - 600 026.**

E-mail : uniscaff@uniscaff.com Web Site www.uniscaff.com

**Phone / Fax : 2483 9061 / 24835560**
**Cell : 94440 25297**

# இதயத்தைத் திருடும் இனியகதைகள்

சந்திரஸ்வாமி உதாசீன் கூறியது

## 1741) ஜகத் என்றால் அசையும் உலகம் என்று பொருள்

மூன்று பௌத்த பிட்சுக்கள் ஓரிடத்தில் நின்று பௌத்தகோயிலின் உச்சியில் பறக்கும் கொடியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

முதல் பிட்சு : கொடி அசைந்து பறக்கிறது!
இரண்டாம் பிட்சு : காற்று வீசிக் கொடியை அசைக்கிறது!!
மூன்றாம் பிட்சு : மனம் அலைந்து பாய்கிறது!!!

மூன்றாம் பிட்சு விழிப்புணர்வு கொண்டவர் ஆவார்.

**கருத்து:** மனம் வேலை செய்தால் இருப்பின் விளக்கம் அசையும் உலகமாகத் தெரிகிறது. மனம் நின்று விட்டால் எல்லாம் நின்று விடுகின்றது.

## 1742) வாழ்வதைத் தவிர்த்தவர்

வறட்டு மதபோதகன் பாலைவன நாதன் குரு ஜீவானந்தத்தின் முன் உட்கார்ந்திருந்தான். பாலைவன நாதன் சாத்திரம் கற்றவன். தன் நம்பிக்கைகளில் பிடிவாதமாக இருப்பவன். தானே சரி, தான் செய்வது தான் நல்ல வேலை என்று உணர்பவன்!

ஜீவானந்தர் சொன்னார்: நண்பனே! நீ சாகும் வேளை வரும்போது நீ ஒரு நாள் கூட உயிரோடு உலாவாமல் உன் வாழ்க்கை முடிந்து போகும். உன் வாழ்நாள் முழுவதிலும் நீ உயிர்வாழவே இல்லை. உயிர்த்துடிப்புள்ள வாழ்க்கை உன்னை விட்டு தூரத்தில் பேய்விட்டது.

கொஞ்சம் சிந்தித்துவட்டு குரு சொன்னார்

“இல்லை! இல்லை! உன் வாழ்க்கை இன்னும் மோசமானது. உயிர்த்துடிப்புள்ள வாழ்வும் நீயும் எதிர்எதிர் திசையில் பேய் விட்டீர்கள்!”

ஜே.பி. வாஸ்வானிஜி கூறியது

## 1743) கீதைக்கு வாய்ப்பூட்டா?

சாது வாஸ்வானீ என்ற முனிவர் கராச்சி சிந்த் டிஜே கல்லூரியில் பேராசிரியராகப் பணி ஆற்றி வந்தார். பாரத மாதாவின் குழந்தைகளான

இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி விவேகானந்தா இன்ஸ்டிட்யூட் ஆஃப் லிங்க்விஸ்டிக் ஸ்கில்ஸ் பிரைவேட் (லிட்) சென்னை – 600 049

சாது வாஸ்வானி



மாணவர்கள், தம் நாட்டின் வளம் மிக்க பாரம்பரியத்தை அறிந்திருக்க வேண்டும் என்று சாது வாஸ்வானி கருதினார். கல்லூரி முடிந்ததும் சிறப்பு வகுப்பாக மாணவர்கட்கு **பகவத் கீதையை** போதிக்கத் தொடங்கினார். அவர் புகழ்பெற்ற பேச்சாளர். கவர்ச்சிகரமாகப் பாடம் நடத்த வல்லவர். மாணவர்கள் திரண்டு கீதை வகுப்புக்கு வந்து கொண்டிருந்தனர்.

பிரிட்டீஷ் ஆட்சியாளர்கள் பகவத் கீதையைப் புரட்சி நூல், பிரிட்டீஷ் ஆட்சிக்கு விரோதமான நூல் என்றெல்லாம் எண்ணி வந்தனர். வங்காளத்து விடுதலைப் புரட்சியாளர்கள் கீதைப் பிரதிகளை வைத்திருப்பது வழக்கம். சிலரோ கீதைப் பிரதிகளைக் கையில் ஏந்தி தூக்கு மேடையும் ஏறினர்.

டி.ஜே. கல்லூரியின் முதல்வர் பேரா. ஃபரைல் என்ற ஆங்கிலேயர் ஆவார். அவர் மனம் கீதை வகுப்பு நடப்பதை ஏற்கவில்லை. அதை நிறுத்திவிடலாம் என்று கூட அவர் சொல்லிப் பார்த்தார். சாது வாஸ்வானி எதிர்த்து வாதம் ஒன்றும் புரியவில்லை. ''மிகவும் நல்லது! மிகவும் நல்லது! என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தார் அவர்''.

சில வாரங்கள் கழிந்தன. முதல்வரின் விருந்தினராக ஒரு பெண்மணி இங்கிலாந்தில் இருந்து வந்திருந்தார். அவர் ஒரு புகழ்பெற்ற மேதை. சாது வாஸ்வானியின் பெயரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த அப்பெண்மணி, அவருடைய பொதுக் கூட்டம் ஒன்றுக்கு வருகை தர விரும்பினார். முதல்வர் ஃபாரைலும் அப்பெண்மணியுடன் போக வேண்டியதாயிற்று.

சாது வாஸ்வானி பிரமாதமாகப் பேசினார். பேச்சினூடே பல தடவை பகவத்கீதையின் உபதேசங்களை அவர் குறிப்பிட்டார். தன்னை மீறி முதல்வர் ஃபாரைல் அப்பேச்சினால் கவரப்பட்டார்.

வயதில் இளையவரான சாது வாஸ்வானியிடம் முதல்வர் கூறினார். ''நாம் மாணவர்கட்கு போதிக்க வேண்டிய பாடம் இதுவே தான். உங்கள் கீதை வகுப்புக்களை நிறுத்தச் சொன்னதற்கு என்னை மன்னியுங்கள்! தொடர்ந்து கீதைப்பாடம் சொல்லுங்கள்''.

மறுபடியும் சாது வாஸ்வானி வழக்கம் போல் ''மிகவும் நல்லது! மிகவும் நல்லது!!'' என்றார்.

ராதாஸ்வாமி சத்சங்கத்தினர் கூறியது

## 1744) பற்றுவிடற்கு இறைவனைப் பற்றுக

கபீர்தாஸர் பயிற்சி நடையாகப் போகும் போது ஒரு சோம்பேறி தன் வயலில் உட்கார்ந்து வீண்பொழுது கழிப்பதைப் பார்த்தார். ''ஐயா! வயலில் வீணே உட்காராமல் கொஞ்சம் இறை தியானம் செய்தால் வாழ்வில் முன்னேறலாமே!''

என்றார் கபீர். அந்த உழவன் சொன்னான் “என் குழந்தைகள் மிகவும் சிறியவர்கள். இப்போது தியானத்திற்கு என்னால் நேரம் ஒதுக்க முடியாது. குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் பெரியவர்களாகட்டும், பிறகு பார்க்கலாம் தியானம் செய்வதைப் பற்றி”.

குழந்தைகள் வளர்ந்தன. பெரியவர்கள் ஆயின. கபீர் மறுபடியும் போய் அந்த உழவனைப் பார்த்தார். “இப்போதாவது தியானத்திற்கு நேரம் கிடைத்ததா” என்று கபீர் கேட்டார்.

உழவன் பதில் சொன்னான். “என் குழந்தைகட்குத் திருமணம் ஆக வேண்டும்! அவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ள வேண்டும். அப்புறம் தான் என் தியானம் எல்லாம்”.

சில ஆண்டுகள் கழிந்தன. கபீர் அவரை மீண்டும் போய்ப் பார்த்தார்:– “அதிர்ஷ்டக்கார நண்பரே, உங்கள் பிள்ளைக் குட்டிகள் எல்லோரும் திருமணமாகி, சுதந்திரமாகி விட்டார்கள். இப்போதாவது தியானத்திற்கு உங்களுக்கு நேரம் கிடைத்ததா?” என்று கேட்டார்.

“ஆஹா என் பேரக்குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகி, திருமணம் செய்வதை என் கண்ணாரப் பார்க்க வேண்டாமா?” என்றார் அவ்வுழவர், கிழவர்.

அதுவும் நடந்தது.

“இப்போதாவது ஆன்மீக வாழ்க்கைக்கு நீங்கள் தயாரா” என்று கேட்டார், கபீர்.

அலுத்துக் கொண்டே உழவர் சொன்னார். “அதை ஏன் கேட்கிறீர்கள். என் பேரன் பேத்திகள் கவனமே இல்லாதவர்கள். நான் தான் வீட்டைப் பார்த்துக் கொள்ள வேண்டும். நானும் விட்டு விட்டால் திருடர்கள் வீட்டினுள் நுழைந்து இருக்கும் கொஞ்ச நஞ்சப் பொருள்களையும் அடித்துக் கொண்டு போய் விடுவார்கள்!”

சில ஆண்டுகட்குப்பின் கபீர் அந்தப்பக்கம் வந்தார். “உழவர் கிழவர் எங்கே?” என்று பேரக் குழந்தைகளைக் கேட்டார். அவர்கள் “கிழவர் செத்துப்போய் விட்டார்” என்று பதில் கூறினார்கள்.

“என்ன பரிதாபம்! அவர் வாழ்க்கையே வீணாயிற்று. கடவுளிடத்தில் சிறிது பக்தி செய்திருந்தாலும் இவ்வுலகச் சிறையில் இருந்து அவர் மீண்டு வந்திருப்பார்”. கபீர் அங்கலாய்ந்தார்.

அவ்வுழவருக்கு, குடும்பம் வீடு, நிலம், ஆடுமாடு இவற்றில் மிகுந்த பற்று இருந்தது. ஒரு பசுமாட்டின் மீது அவருக்கு மிகவும் பற்றுதல் இருந்தது. அந்தப் பசுவின் கன்றுக் குட்டியாக அந்த உழவர் கிழவர் பிறந்திருப்பதை கபீர் தன் ஞானக்கண்ணால் அறிந்து கொண்டார்.

**கபீர்தாஸரின் இந்தப்பாடலை பாரத நாட்டில் பலர் பாடுகின்றார்கள்.**

“அவர் ஒரு காளைமாடாகப் பிறந்தார்.
அவரை ஏரில் பூட்டி ஓட்டினார்கள்
நாளெல்லாம் சுமை வண்டி இழுக்க வேண்டும்
மறுநாள் செக்கில் சுற்றி வர வேண்டும்
எண்ணெய் பிழிய வேர்வைபிழிய
அவரறியுமுன்னே ஒரு கசாப்புக்கடைக்காரன்
வெட்டிச் சிதைத்தான், மாமிசத்தை விற்றான்.
தோலையும் விடவில்லை. டமாரத்தில் இழுத்துக் கட்டினான்
கருமம் கொஞ்சம் பாக்கி அவருக்கு,
டமாரத் தோலை அடி அடி என்று
அடித்து முழங்குகிறார்கள்”. பாவம்!

சிருங்கேரி சங்கராச்சாரியார் கூறியது

## 1745) அடையாளம் தெரிந்தது

சத்ஷேத்ரம் என்ற நாட்டில் நிஜரூபன் என்ற ஒரு ராஜகுமாரன் இருந்தான். அவனுடைய குழந்தைப் பருவத்தில் சில வனவாசிகள் அவனைக் கடத்திக் கொண்டு போய்விட்டனர். நல்ல வேளை அந்த வனவாசிகள் அவனை நன்கு பார்த்துக் கொண்டார்கள். நிஜரூபன் ஒரு விறகு வெட்டியாக வளர்ந்து, வாழ்ந்து வந்தான்.

காலப்போக்கில் நிஜரூபனின் தந்தை மன்னன் இறந்து போனான். அரசவையினர், ராஜகுமாரனைத் தேடும் வேலையைத் தீவிரப்படுத்தினார்கள். சிலர் அவரைக் காட்டில் தேடி அடையாளம் கண்டு கொண்டனர். “நீ ஒரு அரச குமாரன்” என்று அவனிடம் அவர்கள் கூறினார்கள். “உன் தந்தை இறந்து விட்டார். நீ நாடு திரும்பி வந்து அரசனாகு!” முதலில் நிஜரூபன் அவர்கள் சொன்னதை நம்பவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அவன் அவர்கள் பேச்சை நம்ப ஆரம்பித்தான். நாடு திரும்பினான். சில நாட்களில் ஒரு மன்னனைப் போலவே நடந்து கொள்ளக் கற்றுக் கொண்டான் நிஜரூபன்.

உண்மையில் நாம் பரம்பொருள் வடிவினர் ஆவோம். நமக்குத் தளைகள் ஏதும் கிடையாது. அறியாமையினால் நாம் பிறந்து இறந்து, துன்புறுபவர்களாக நம்மை எண்ணிக் கொள்கிறோம். குருவின் சொற்கள் மூலம் நம் சுய வடிவை உணர்ந்து கொள்கிறோம். நம் கற்பனைத் தளைகளை வெட்டி அகற்றுகிறோம். ஆனந்தப் பரம்பொருளாக நம்மை உணர்ந்து கொள்கிறோம்.

உண்மையான மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. தவறான நம்பிக்கைகள் ஒழிக்கப்படுகின்றன. அரசகுமாரனின் கதையில் வருவதைப் போல.

ஜே.பி. வாஸ்வானி கூறியது

## 1746) அந்தப்படங்கள் அவ்வளவு அழகாக இருக்க காரணம் என்ன?

ஒரு ஊரில் மிகவும் திறமை வாய்ந்த ஒரு ஓவியக்கலைஞன் இருந்தான். அவன் பெயர் "அநாமதேயம்". அவன் வரைந்த படங்களைப் பார்த்து மக்கள் பெரிதும் போற்றிப் புகழ்வர். சொல்வர்:

"உங்கள் ஓவியங்களைப் பார்த்தால் எங்களுககு ஆனந்தச் சிலிர்ப்பு உண்டாகிறது! நாங்கள் பரிசுத்தமானவர்கள் ஆகிறோம். இறைவனின் இதயத்திற்கு அருகல் நாங்கள் இருக்கப்படுவதாக உணர்கிறோம். இந்த ஓவியங்களில் அப்படி என்ன கவர்ச்சி இருக்கிறது?"

அந்த ஓவியங்களைப் பற்றி ஒரு விஷயம் குறிப்பிட வேண்டும். ஒரு ஓவியத்தில் கூட அந்த ஓவியனின் பெயர் முத்திரை இருக்காது.

ஒரு நாள் ஓவியன் 'அநாமதேயத்தின்' நண்பன் நாமகிரி கேட்டே விட்டான் ஒரு கேள்விளை.



"உங்கள் ஓவியங்கள் இவ்வளவு கலை நேர்த்தியுடன் இருக்கின்றன. பலர் அவற்றைக் கண்டு வியக்கின்றனர். ஏன் அவை ஒன்றில் கூட உங்கள் கையெழுத்தை நீங்கள் போடவில்லை?"

பதிலாக "அநாமதேயம்" - நண்பன் நாமகிரியை தன் ஓவியக் கூடத்துக்கு அழைத்துப் போனான். அங்கு கிருஷ்ண பரமாத்மாவின் பேரற்புதமான படம் ஒன்று மாட்டப்பட்டு இருந்தது. அதன் கீழே இவ்வாசகம் எழுதப்பட்டிருந்தது.

"ஓ பகவானே! இந்தப் படங்களைப் பார்த்து பலர் உன்னிடம் கவர்ந்து இழுக்கப்பட்டு வரட்டும். என் பெயரை மக்கள் மறந்து போய் விடட்டும்".

நரேந்திரவாணியில் இருந்து

## 1747) ஈத்துவக்கும் இன்பம்

ஜாண் ஹரிச்சரணிடம் நான்கு டாலர் தான் பணம் இருந்தது. ஒரு கிலோ பாலும் ஒரு முழு ரொட்டியும் வாங்கினால் அவனும் இரண்டு குழந்தைகளும் சாப்பிடப் போதும். அதற்கு மேல் எதுவும் அந்தப் பணத்தில் வாங்க முடியாது!

அவன் மனைவி அண்மையில் தான் புற்று நோயால் இறந்து போயிருந்தாள். கடன் சுமை ஏராளம் ஜான் ஹரிச்சரணின் தலையில். அவன் ஒரு அரைநேர வேலை பார்த்து ஏதோ சம்பாதித்து வந்தான்.

கடைக்குப் போகும் வழியில் அவன் ஒரு குடும்பத்தைப் பார்த்தான். குடும்பத் தலைவன் கையில் ஒரு அட்டை இருந்தது. அதில் "உணவுக்காக வேலை செய்ய நான் தயார்" என்று எழுதப்பட்டு இருந்தது. அவனருகே அவன் மனைவியும் இளைத்துப் போயிருந்த ஒரு குழந்தையும் நின்றிருந்தனர்.

ஜாண் ஹரிச்சரணின் மனத்தில் ஒரு போராட்டம். கையில் இருக்கும் பணத்தில் தன் குழந்தைகட்குப் பாலும் ரொட்டியும் வாங்குவதா – அல்லது பாதிப்பணத்தை இந்த உழைப்பாளி ஏழைக்கும் கொடுத்துவிட்டு தன் குழந்தைகட்குப் பால்மட்டும் வாங்குவதா?

சிறிது மனப் போராட்டத்திற்குப் பிறகு வருவது வரட்டும் என்று இரண்டு டாலர்களை அந்த ஏழைக்குக் கொடுத்து விட்டான் ஜாண் ஹரிச்சரண்.

ரொட்டி, பால் கடையை நோக்கி கனத்த இதயத்துடன் நகர்ந்தான் அவன். காலடியில் ஏதோ தட்டுப்பட்டது, குனிந்து பார்த்தால் ஒரு இருபது டாலர் பண நோட்டு. மகிழ்ச்சியுடன் அவன் கடைக்குள் நுழைந்தான். தன் குழந்தைகட்கு வேண்டியதை எல்லாம் வாங்கிக் கொண்டான்.

அவன் வாழ்க்கையில் திரும்பத் திரும்ப நடந்த ஒரு விஷயம் – அவனிடம் எவ்வளவு குறைவாக இருந்தாலும் சரி, பிறருக்கு அதில் கொஞ்சத்தைக் கொடுக்கும் போதெல்லாம் ஒன்றுக்குப் பத்தாக அவனிடமே நல்லது திரும்ப வரும்! சில சமயம் உடனேயே, சில சமயம் கொஞ்சம் தாமதித்து. ஆனால் அவனுக்குத் திரும்பக் கிடைக்காமல் போனதே இல்லை!

## 1748) இந்த மாதிரியே எனக்கும் . . . .

ஏழை ஏலப்பன் சாலையில் நின்றிருந்தான். செல்வந்தன் செம்புநாதன் ஒரு விலை உயர்ந்த மோட்டார் வண்டியில் அங்கு வந்தான். "தம்பீ நீயும் வண்டியில் ஏறிக் கொள். உன்னைப் பள்ளிக் கூடத்தில் கொண்டு போய் விடுகிறேன்" என்றான். பள்ளி வந்ததும் ஏலப்பன் சொன்னான் "உன் மோட்டார் வண்டி படுஜோராய் இருக்கிறது. சவாரி குஷியாக இருந்தது! இந்த வண்டியின் விலை என்ன?"



செல்வந்தன் செம்புநாதன் சொன்னான் "எனக்கு இந்த வண்டியின் விலை தெரியாது. எங்கள் அண்ணா எனக்கு இதனைக் கொடுத்தார்".

ஏலப்பன் சொன்னான்! “எவ்வளவு நல்ல அண்ணா அவர்!” செல்வன் செம்புநாதன் கேட்டான் “உனக்கும் இப்படி ஒரு அண்ணா இருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைக்கிறாயா!” ஏலப்பன் பதில் கூறினான்! “இல்லை நானும் அவரைப்போல் ஒரு சகோதரனாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்!”

**நீதி:** மற்றவர்கள் உன்னிடம் என்ன எதிர் பார்க்கிறார்களோ அதை விட உயர்ந்து எழுந்து நிற்க முயற்சி செய்!

விநோபாஜி கூறியது

## 1749) பயனில் விருப்பம் உடைய பக்தியும் குணமுள்ளதே

பெண்கள் காலையில் எழுந்து பலவகை விரதம் முதலியன செய்கிறார்கள்; விளக்கேற்றி வைத்து வணங்குகிறார்கள்; துளசி மாடத்தை வலம் வருகிறார்கள். எதற்காக? இறந்தபின் ஆண்டவன் அருள் கிடைக்க வேண்டும் என்பதற்காக. அவர்கள் இத்தகைய கள்ளமற்ற நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்; ஆனால் அதன் பொருட்டு அவர்கள் விரதம், ஜபம், உபவாசம் முதலியவைகளை அனுஷ்டிக்கிறார்கள். இத்தகைய விரத அனுஷ்டானங்கள் நடைபெறும் குடும்பத்தில் மகான்கள் பிறக்கிறார்கள். துளசிதாசர் குலத்தில் ராமதீர்த்தர் பிறந்தார். ராமதீர்த்தர் பாரசிக மொழி நன்கு கற்றவர். எவரோ அவரிடம், “துளசிதாசரது குலத்தில் பிறந்திருந்தும் உனக்கு ஸம்ஸ்கிருதம் தெரியவில்லையே!” என்று சொன்னாராம். ராமதீர்த்தர் மனத்தில் இச்சொல் போய்த் தைத்துவிட்டது. குலத்தின் நினைவுக்குள்ள இச்சக்தியை என்னென்பது? இதனால் தூண்டப்பட்ட அவர் ஸம்ஸ்கிருதத்தைக் கரைத்துக் குடித்துவிடுவதென முனைந்துவிட்டார். பெண்டிரிடம் காணப்படும் பக்தி உணர்ச்சியை நாம் கேலி செய்யக்கூடாது. பக்தி இத்தகைய ஒவ்வொரு துணுக்காய்ச் சேர்க்கப்படும் இடத்தில் ஞானஒளிமிக்க பிள்ளைகள் பிறக்கிறார்கள். இதனாலேயே பகவான், “என் பக்தன் ஸகாமனாய் இருந்த போதிலும் நான் அவன் பக்தியை உறுதிப்படுத்துவேன். அவன் மனத்தைக் குழப்பமாட்டேன். அவன் உண்மை உள்ளத்தோடு என் நோயைப் போக்கென்று வேண்டினால் நான் அவனது ஆரோக்கிய பாவனையை வலுப்படுத்தி அவன் நோயை அகற்றுவேன். அவன் எந்நோக்குடன் என்னை அணுகிய போதிலும் நான் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து அவனுக்கு மதிப்பே அளிப்பேன்” என்கிறார். துருவனது வரலாற்றையே எண்ணிப் பாருங்களேன். அவனுக்கு தந்தையின் மடியில் ஏற முடியாமற் போனபொழுது அவன் தாய், “ஆண்டவனிடம் போய் இடம் வேண்டு” என்று சொன்னாள். அவன் உடனே உபாசனையில் முனைந்துவிடவே பகவான் அவனுக்கு அழியாத இடத்தை அளித்துவிட்டார். மனம் பயனைக் கருதாததாய், நிஷ்காமமாய் இல்லையேயென்றால் அதனால் என்ன? இதில் மனிதன் யாரை அணுகுகிறான், எவரிடம் வேண்டுகிறான் என்பதே முக்கியமான விஷயம். உலகின் முன் கையை ஏந்தாது கடவுளை வேண்டுவதற்குள்ள பெருமையைக் குறைத்துக் கூறுவதற்கில்லை.

ஏக்நாத்ஜி கூறியது

## 1750) சிறு சிறு பிணக்குகளினால் ஆழ்ந்த லட்சியம் நஷ்டப்படக்கூடாது

நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கம் இருவித அர்த்தங்கள் உண்டு. ஒன்று வெளிப்படையானது (வாச்யார்த்தம்) மற்றது கருதிய அர்த்தம் என்று கூறப்படும் (லக்ஷ்யார்த்தம், பாவார்த்தம்) எந்தப் பேச்சின் வெளிக்கருத்தைக் காட்டிலும் உள் கருத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீராமன் காட்டில் தங்கமானைத் துரத்திச் செல்லுகையில் மாரீசன் ராமன் குரலைப் போலவே பரிதாபமாக அழும் சப்தத்தைக் கேட்டு சீதை லக்ஷ்மணனை ராமனுடைய உதவிக்குச் செல்லுமாறு நிர்ப்பந்தம் செய்தாள். லக்ஷ்மணனுக்கு மாரீசனின் சூது நன்கு தெரியும். அதனால் அவன் ராமனின் கட்டளையை மீறாமல் சீதையைப் பாதுகாத்து வந்தபோது சீதை அவனைக் கடுமையான சொற்களால் தாக்கி அவதூறும் பேச முற்பட்டாள். புத்திமானான லக்ஷ்மணன் அப்பொழுதும் பதட்டம் அடையாமல் சீதையின் மனக்கிலேசத்தை நன்கு அறிந்து கொண்டான். நற்பண்புகளே உருவான குடும்பச் சூழ்நிலையில், கடும் வாக்கு வாதங்கள் நிகழ்ந்தாலும் அதைச் சரியான முறையில் யாவரும் எடுத்துக் கொள்வர். குடும்பத்தில் சேர்ந்து ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று உறுதி மட்டும் இருந்தால் பிணக்குகள் நேர்ந்தாலும் பெரிதுபடுத்தமாட்டார்கள். அகம்பாவ நிலையோ, கௌரவப்பிரச்சனையோ அந்தச் சூழ்நிலையில் எழுவதில்லை. இத்தகைய பிரச்சனைகளே சாதாரணமாகச் சண்டை சச்சரவுகளுக்குக் காரணமாகின்றன. மனிதர்களிடையே பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் மனோபாவம் மட்டும் இருக்குமேயானால், மாறுபட்ட கொள்கை, கருத்துக் கொண்ட இருவர் கூட ஒரே அறையில் சண்டை சச்சரவு இல்லாமல் சுமூகமாக வாழ்ந்து காட்ட முடியும்.

## சங்கரன் கோவிலில் 1008 விளக்கு பூஜை

சங்கரன் கோவிலில் பிரம்மாண்டமான உட்பிரகாரங்கள் சைவ, வைணவ ஒற்றுமை, அம்மன் தவசு இவற்றைப் பார்த்தாலே அங்கே ஒரு 1008 விளக்கு பூஜை நடத்த வேண்டும் என்று தோன்றும். உள்ளூர் அன்பர் கேந்திரத் தொண்டர் சேகர், தன்னார்வத் தொண்டு புரியும் உள்ளூர்ப் பள்ளி ஆசிரியர்கள், கேந்திர பால சேவிகாக்கள் ஆகியோர் நடத்திய பூஜை, பஜனை, சமய வகுப்புக்கலை நிகழ்ச்சிகள், பாலர்பள்ளி கலைநிகழ்ச்சிகள் அழகுடன் நடைபெற்றன. இடம் ரெட்டியார் திருமண மண்டபம். திரு சேகர், நாகசாமி, பரமகுரு, ஐயப்பன் சிறப்புரையும் ஒருங்கிணைப்பும். ஊர்வலம் மிகவும் ஜோர்.

சிறப்பு விருந்தினர்கள் கேந்திர சகோதரி சத்யவதியும் ஆசிரியை பட்டுக்கனியும்.

# கால்நடைச்செல்வம்

வேணி சங்கர் எம். வாசு

1. நம்நாட்டின் பொருளாதாரம் பசுமாட்டை அடிப்படையாகக் கொண்டது. இங்கு உழவும், சுமை இழுத்துச் செல்வதும் காளை மாடுகளை ஆதாரமாக் கொண்டவை. பசுமாடோ, ஊட்டம் மிகுந்த உணவைத் தருகிறது.

2. நம் நாட்டின் பரப்பளவு 32.6 கோடி ஹெக்டேர்கள். கிழக்கு மேற்கில் 2977 கி. மீட்டரும் தெற்கு வடக்கில் 3219 கி. மீட்டரும் இதன் பரப்பளவு. இப்போது நம் நாட்டின் மக்கள் தொகை 120 கோடி. நம் மக்கள் தொகையில் 87% 5,66.878 கிராமங்களில் வசிக்கிறார்கள்.

3. ஆதாரத்தானமாகிய பசுக்குலம் நம் பொருளாதாரத்தைத் தாங்கி நிற்கிறது. அது (1) உழவு, உரம் நல்குகிறது (2) உணவும் ஊட்டமும் உதவுகிறது (3) வண்டி இழுக்கிறது. (4) எரிபொருள் வழங்குகிறது (5) மனையும் மருந்தும் தருகிறது.

4. நம் நாட்டுக் காளைமாடுகள் 40 கோடி ஏக்கர் (16 கோடி ஹெக்டேர்) நிலத்தை உழுகின்றன. இந்த வேலை முழுவதையும் டிராக்டர் மூலம் செய்து முடிக்க 50 லட்சம் டிராக்டர்கள் தேவைப்படும். இரும்பு உருக்கினை வெளி நாடுகட்கு ஏற்றுமதி செய்துவிட்டு, காளைமாட்டின் மூலம் உழவு செய்வது அதிக நன்மை பயக்கும்.

5. நம் நாட்டில் நாற்பது லட்சம் நாட்டுக் கலப்பைகளும் எழுபத்து மூன்று லட்சம் உழவுக்காளைகளும் உள்ளன. நம் 41 லட்சம் கலப்பைகளை இழுக்க 81 லட்சம் உழவுக்காளைகள் வேண்டும். ஏற்கெனவே உழவுக்காளைகள் பற்றாக்குறையாக இருக்கும் நம் நாட்டில் அவற்றை மாட்டு மாமிசத்திற்காக கொல்வது மிகவும் தவறு.

6. மண்ணின் உரச்சத்து, வண்டி இழுத்தல் முதலிய தேவைகட்கு நமக்கு 6.3 கோடி மாடுகள் தேவை. நம்மிடம் இருப்பது ஒரு கோடியே எழுபது லட்சம் மாடுகளே.

7. நாம் வெளி நாடுகளில் இருந்து உணவு தானியம் இறக்குமதி செய்வது அதிகரித்துக் கொண்டே போகிறது.

8. ஒரு ஆண்டுக்கு நமக்கு 4 கோடி டன் ரசாயன உரங்கள் தேவை. இதற்கான முதலீடும், போக்குவத்துச் செலவும் மிக அதிகம். அதற்கு பதிலாக நாட்டுப் பசுக்கட்குத் தீனிபோட்டு, குறைவாகவேனும் பாலைப்பெற்று, பால், சாணம், காளைமாடு இவற்றைப் பெறலாமே!

9. உணவு தானியங்களைச் சேமித்துக் காத்து வைக்க பசுச்சாணத்தின் சாம்பல் நன்கு பயன்படும். பசு, காளைகளின் தோல் கிணற்றுப்பாசனத்தில் "கவலை"கள் செய்யப்பயன்படும்

10. சந்தைக்கு உணவு தானியங்களைக் கொண்டு போகக் காளைமாடுகள் பயன்படும்.

11. மாட்டுச்சாண வரட்டியும் சாண எரிவாயுவும் எரிபொருள் தரும்.

12. வயல் கழிவுகளைத் தாம் உண்டு பசுவினம் உரத்தைப் பயன் சுழற்சி செய்கின்றது.

## பசு பணம் தரும்



**வினின் பெரைரா**

நம் நாட்டில் இருக்கும் 8 கோடி இழுவை மிருகங்கள் உள (மாடு, குதிரை, ஒட்டகம், யானை) பெரும்பான்மை மாடுகள் தாம் விவசாயத்திற்குத் தேவைப்படும். வண்டி, கலப்பை இழுக்கும் பணியை அவை ஆற்றும். இது 66% ஆகும். 23% மனித உழைப்பு ஆகும். டிராக்டர் தண்ணீர் பம்பு ஆகியவை 11 சதவிகிதம் ஆகும். புதுப்பிக்கப்படமுடியாத இந்த எரிபொருள் செலவாவதையும் மனித, மிருக சக்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் தடுக்க முடியும்.

நம் நாட்டில் நிறையக் கட்டை வண்டிகள் உள்ளன. அவை 2 கோடி ஆகும். இரண்டரைக் கோடி உழைப்பாளிகள் தம் பிழைப்புக்கு அவ்வண்டிகளை நம்பியுள்ளனர். அவர்கள் வருமானம் 2000 கோடி ஆகும். அவர்கள் மட்டும் ஆண்டுக்கு 5 கோடி டன் சாமான்களை சுமந்து செல்கிறார்கள். மற்ற இழுவை சாதனங்கள், லாரி, ரயில், படகு ஆகியவை 20 கோடி டன் சுமையை இழுத்துச் செல்கின்றன.

மாட்டு வண்டிகளால் ஆண்டுக்கு நம் நாட்டுக்கு 60 லட்சம் லிட்டர் பெட்ரோல் எரிபொருள் மிச்சம் ஆகிறது. இதன் மதிப்பு 4000 கோடி ரூபாய் (2001). மாடு இழுக்கும் வண்டியில் ரயில், லாறி போல் புறச்சூழல் மாசுபடுவது கிடையாது. புறச்சூழல் மாசுபடுவதால் விவசாய உற்பத்தி குறைகிறது.

இப்போது இருப்பதைப் போல் மாட்டு வண்டிகளின் எண்ணிக்கை 4 மடங்கு பெருக வேண்டும்.



**சுரண்டையில் குருபூர்ணிமா**

## நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்

# நம்பிக்கைதான் முக்கியம் – குடும்பமும் பொருளாதாரத்தின் அரசியலும்

**ஃபிரான்சிஸ் ஃபுகுயாமா**

### 6) தனிநபர்கள் குடும்பங்கள் ஆகியவை, சோறு சம்பாதிப்பதைத் தவிர வேறு பொருளாதார நடவடிக்கைகள் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?

பசியைப் போக்கும் அளவுக்குமேல், பொருளாதார நடவடிக்கைகளை மக்கள் மேற்கொள்ளுவது, பெரும்பாலும் (சமூக) அங்கீகாரம் பெறுவதற்காகவே. இயற்கையான செல்வத் தேவைகளை விட அங்கீகாரத் தேவையே அதிக முக்கியத்துவம் பெறுகிறது. பொருள் தேவைகள் சிலவே. அவை எளிதில் நிறைவேறிவிடுகின்றன. பணியும் பணமும் இன்னும் அதிக அளவில் முக்கியமானவை. அந்தஸ்தின் அடையாளம், கௌரவம் இவற்றைப் பணமும் பணியும் குறிக்கும். இவ்வித அங்கீகாரத்தைத் தனிமனிதர்களால் சாதித்து விட இயலாது. ஒரு சமுதாயப் பின்னணியில் தான் அது கிடைக்கும்.

### 7) தனிநபர்கள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள ஒரு சமுதாயம் எவ்விதத்தில் உதவி புரியக்கூடும்?

பொருளாதார ரீதியில் வெற்றிகரமாகத் திகழும் சமுதாயங்களைப் பார்ப்போமானால் அவை தெள்ளத் தெளிவான ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் உருவாகி இருக்கமாட்டா என்பதை நாம் உணருவோம். அவை உருவாவது, நீதி நெறி அடிப்படையிலான பழக்கங்கள், ஒருவருக்கு ஒருவர் ஒழுக்க அடிப்படையில் கொடுத்து வாங்கும் தேவைகள், சமுதாய உறுப்பினர்களின் அடிமனம் வரை போய்ப்பதிந்து இருப்பதே வெற்றிக்கு அடையாளம். இந்த விதிகளும் பழக்கங்களும் சமுதாய உறுப்பினர்களிடையே பரஸ்பர நம்பிக்கையை உருவாக்குகின்றன. சமுதாயத்தை ஆதரிப்பது என்பது குறுகிய பொருளாதார சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டிராது. அதற்குமாறாக, நம்பிக்கை இல்லாதபோது, அச்சமுதாயம் பொருளாதாரத்தில் மோசமாகச் செயல்படுகின்றது.

### 8) ஒரு சமுதாயத்தில் நம்பிக்கை மேலெழும் போது என்ன முன்னேற்றம் காணப்படுகிறது?

ஒருவரை ஒருவர் ‘நம்பும்’ சமூகத்தில் அம்மக்களுக்கு சமுதாய மூலதனம் என்பது மக்கள் ஒன்றிணைந்து, குழுக்களாகவோ நிறுவனங்களாகவோ பொது நன்மைக்கென உழைக்க முடிவது ஆகும்.

திறமையுள்ள மனிதர்களின் மதிப்பு, நிலம், தொழிற்சாலை, கருவிகள், இயந்திரங்கள் ஆகிய மூலதனங்களின் மதிப்பைவிட அதிகமாகும். திறமைகளும் அறிவும் வேண்டும். அவற்றைக் காட்டிலும் அதிகமாக, மக்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து வேலை செய்ய முடிவது, தனிச்சிறப்புள்ள சமூக மூலதன அம்சம் ஆகும். இவ்விணக்கம் எதைச் சார்ந்தது? சமுதாயங்கள் எந்த அளவுக்கு, அளவுகோல்கள், மதிப்பீடுகள், இவற்றைப் பகிர்ந்து கொள்கின்றன? எந்த அளவுக்கு தனிநபர் ஈடுபாடுகளை, பெரிய அளவிலான ஈடுபாட்டுக்குக் கீழ்ப்படிய வைப்பதில் எவ்வளவு வெற்றியை அவை பெற்றுள்ளன என்பதைப் பொறுத்தது, அக்குழுவின் சமூக மூலதனம் இப்படி மதிப்பீடுகளைப் பங்குபோட்டுக் கொள்வதில் இருந்து நம்பிக்கை பிறக்கிறது. **"நம்பிக்கை"** என்பது பெருமளவிலான பொருளாதார மதிப்புக் கொண்டது. அதனை அளவிட்டுப் பார்க்க நம்மால் முடியும்.

### 9) நம்பிக்கை எனும் மூலதனம் நலிவடையும் போது என்ன ஆகின்றது?

ஒரு சமுதாயத்தில் இந்த பரஸ்பர நம்பிக்கையின் மதிப்புக் குறைகிற போது, சமுதாயம் தனிநபருக்கு முக்கியத்துவம் கொடுத்து, தனிநபரின் போக்குகளை ஆதரிப்பதாகி விடுகிறது. உரிமைகளை ஆதாரமாகக் கொண்ட தாராள மனப்பாங்கு என்னும் கொள்கை, ஒரு உள்ளார்ந்த போக்கினைக் கொண்டதாகும். அது விரிவாகி அந்த உரிமைகளைப் பெருக்கி விடுகிறது. அனைத்துச் சமுதாயங்களின் அதிகாரத்தை அது எதிர்க்கிறது. அதன் தீவிரப்படுத்தப்பட்ட உதாரணம் தான் அமெரிக்கா. இவ்வாறு நடக்கும் போது, வன்முறைக்குற்றங்கள் அதிகரிக்கின்றன. நாகரீக வாழ்வில் வழக்குப் போடும் போக்கு அதிகரிக்கிறது. குடும்பம் என்ற கட்டமைப்பு உடைந்து போகிறது. மிகப் பரவலான இடைநிலைச் சமுதாயக் கட்டமைப்புக்களான அக்கம்பக்கத்தாருடன், இணக்கம், சமயநிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், கிளப் குழுக்கள், அறநிறுவனங்கள் நலிவறுகின்றன. நற்குண மதிப்பீடுகளைப் பகிர்ந்து கொள்ளுதல், சமுதாயம் என்ற உணர்வு இவை பரவலாகக் குறைகின்றன. இது மக்களால் உணரவும் படுகிறது. அமெரிக்கச் சமுதாயம் (மற்றெந்த சமுதாயத்தையும் விட) அதிகப் பணம் செலவு செய்து காவல் துறையிடம் இருந்து பாதுகாப்புப் பெறுகிறது. தன் மொத்த மக்கள் தொகையில் ஒரு சதவிகிதத்திற்கும் மேலான எண்ணிக்கையில் மக்களைச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறது. தன் வழக்குரைஞர்கட்கு அதிகப் பணத்தைச் செலவு செய்கிறது. மக்களிடையே பரஸ்பர நம்பிக்கை உடைந்து சிதறுவதால் அரசாங்கத்துக்கு மக்கள் செலுத்தும் நேர்முக வரி அதிகரிக்கிறது. மக்களிடையே ஒத்துழைப்பு வளர முடியாமல் மேலும் மேலும் தடைகள் விதிக்கப்படுகின்றன. சமூக மூலதனம் என்ற நிதி குறைந்து போய்விடுகின்றது.

### 10) அவ்வாறானால், வரலாறு, தாராள மனப்பாங்குள்ள மக்களாட்சி, பகுத்தறிவு ஆகியவற்றுக்கு என்ன கதி ஏற்படும்?

சிலர் வரலாறு என்பதே முடிந்து விட்டது என்று பேசுகிறார்கள். தாராளமனப்பாங்கு கொண்ட மக்களாட்சி என்பது வரலாற்றின் முடிவில்

வந்தாலும் அது முற்றிலும் நவீனமானது அல்ல! மக்களாட்சி, முதலாளித்துவம் ஆகிய நிறுவனங்கள் நல்ல முறையில் வேலை செய்ய வேண்டுமானால், நவீன காலத்திற்கு முற்பட்ட சிற்சில பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் அவற்றுடன் இணைந்து வாழவேண்டும். தொழில் முன்னேற்றச் சமுதாயம் ஒன்றை நடத்திச் செல்வதற்கும் சட்டம், ஒப்பந்தம், தர்க்கபூர்வமான பகுத்தறிவுக்கு ஒத்த பொருளாதாரத் தத்துவங்கள் மட்டும் போதாது. ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்தல், நீதிநெறி ஒழுக்க ரீதியில் ஒருவருக்கு ஒருவர் கடன்பட்டிருப்பதை உணர்ந்து செயல்படுதல், சமுதாயக் கடமைகள், பரஸ்பர நம்பிக்கை இவையும் கூடுதலாக வேண்டும். இவையெல்லாம் பகுத்தறிவுக்கொத்த தர்க்கபூர்வமான கூட்டிக் கழித்தலில் இருந்து கிட்டமாட்டா. இவை பழக்கவழக்கம், மரபு இவற்றையே ஆதாரமாகக் கொண்டவை.

### 11) இத்தகைய கட்டாயங்கட்கு தேசப் பண்பாடுகள் தரும் பதில் என்ன?

சீனம், பிரான்சு, இத்தாலி, தென்கொரியா ஆகிய நாடுகள் குடும்பத்தை ஆதாரமாகக் கொண்ட நாடுகள். ஜப்பானும் ஜெர்மனியுமோ, குடும்ப உறவுகளை அடிப்படையாகக் கொள்ளாத பிரம்மாண்டமான தொழில் நிறுவனங்களை வளர்த்துள்ளன. பொருளாதார ரீதியில் வெற்றி பெற்றுள்ள இந்த நாடுகள் அனைத்திற்கும் பொதுவான மூலதனமாக சமூக உறவுகள், உறவாடும் போக்கு இவையே இருந்திருக்கின்றன.

### 12) குடும்ப குணங்கள், நன்மதிப்புக்கள் பலமாக இருந்து, அக்குடும்பங்கள் இன்னும் விரிவான சமுதாயத்தில் சென்று இணையாமல் தனித்து நிற்பவையாக இருந்தால் அச்சமுதாயத்தில் என்ன விளைவுகள் ஏற்படும்?

இங்கெல்லாம் அரசாங்கம் குறுக்கிட்டு பெரிய தொழில்களை நிர்மாணம் செய்வதொன்றே வழி!

### 13. மனிதன் எப்போதுமே பொருளாதார ரீதியில் சுயலாபத்திற்காகவே எச்செயலையும் செய்கிறான் இல்லையா?

பொருளாதார நடவடிக்கைகள் அனைத்துமே, பொருளாதார சுயநலத்தில் இருந்தே விளைந்தவை என்று கூறிவிடமுடியாது! மனிதர்கள் எல்லோருமே, தர்க்கபூர்வமாக சிந்தித்து, பயனை அதிகரிக்கும் தன்மையுடையவர்கள் என்ற கருத்தைப் பற்பல நிபந்தனைகட்கு உட்பட்டே ஏற்க வேண்டும். வேறு கவலைகளான அங்கீகாரம், சமயப்பற்று, நியாய உணர்வு, கௌரவப்பிரச்சினை, மரியாதை என்பவை எல்லாம் வெறும் (உடனடிப்) பயன் என்பதை விட மேலான தூண்டுகோல்கள்.

(கட்டுரை தொடரும்)



## டாக்டர் ராதா கிருஷ்ணனின் கருத்துக்கள் சிலவற்றை வாசகர்களுக்கு முன் வைக்கிறோம்.



**நாகரீகம் என்பதென்ன?** நாகரீகம் என்பது இயந்திரங்களினால் கட்டப்படுவதல்ல! நாகரீகம் என்பது மானுட நற்குணங்களால் உருவாக்கப்படுவது. நாகரீகத்தினை உருவாக்கும், உந்தும் சக்திகள் உள்ளே இருந்து வருகின்றன. விஞ்ஞான உண்மைகளைத் தேடுவது மதிப்புள்ள தேடல் தான். மனத்தின் திறமை, மனஉறுதி இவற்றின் மூலம் இயற்கையை வெல்லுகிறோம். நம் விஞ்ஞான முன்னேற்றங்கள் நம் படைப்பாற்றலுக்கு, நம் உற்சாகத்துக்குச் சான்றுகள் ஆகும். மனித ஆன்ம சக்தியில் தான் எத்தனை எத்தனை விதங்கள்! ஆனால் நாகரீகத்தின் முன்னேற்றம் பெற அறிவுசார் படைப்பாற்றல் மட்டும் போதாது. நல்லொழுக்கம் வேண்டும், கண்ணியம் வேண்டும், கருணை வேண்டும். இந்த நல்லொழுக்க குணங்களை வளர்த்துக் கொள்வோமானால், நம்மை நட்சத்திரப் பாதைகள் கூட வென்று விடமுடியாது. நமக்குள் இருக்கும் உயிர்த்துடிப்பினை மென்னியைப் பிடித்து அடக்குவோமானால் நம் சமுதாயம் நொறுங்கிப் போய் விடும்;

**வேரை விட்டு விட்டோமோ!** நம் தீங்குகட்கு முக்கியக்காரணம் நாம் நம் வேர்களில் இருந்து பிடுங்கி எறியப்பட்டது தான். நமக்கு சமச்சீரும் நிதானமும் தரும் ஆன்மீக அடித்தளங்களில் இருந்து நாம் வேறாகி நிற்கிறோம். நம்மில் பலர் நம் வரலாற்றுத் தொடர்புகளை இழந்து விட்டோம். நம் கடந்த காலத்தில் இருந்து விலகி அகதிகள் ஆகிவிட்டோம். நமக்கு, காலத்தால் நெருங்கி இருப்பவை நமக்கு ஆன்மீகத்தாலும் நெருங்கியவை என்று பொருளல்ல! வரலாற்றின் ஆழமான அடி நீரோட்டத்திற்கு மதிப்பு உண்டு. மேல் நுரைக்கு ஏது மதிப்பு? இந்த ஆழமான நற்குணங்கள் தான் நமக்கு பலம் தந்து, நம் வாழ்வில் உயிர்த்துடிப்பை, தெம்பைக் கொண்டு வந்து சேர்க்கின்றன. இத்தனை நூற்றாண்டுகளாக நாம் உயிர் பிழைத்து இருந்ததற்கு நம் ஆன்மீக நற்குணங்களே காரணம். நம் தன்னம்பிக்கையை இழந்துவிட்டால் பிறர் எப்படி நம்மை நம்புவார்கள்? மனித இயல்பினைப் புதுப்பித்து, படைப்பாற்றலுடன் அதனை மாற்றிப்போட்டுவிடுவோம். அது நம்மை பயம், துன்பம் இவற்றில் இருந்து வெளியே கொண்டு வரும். கையாலாகாத்தனம், ஐயோ என்ன செய்வோம் என்று வாடி இருத்தல் இவற்றில் இருந்து மீளுவோம். தைரியத்துடன் புதிய உலகம் படைக்க முன் வருவோம்.

இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி
எஞ்ஜினியர் திரு ஜி. மதிவாணன், சென்னை

நற்குண வளர்ச்சி

# மானுட நற்குணங்கள்

*ஸ்வாமி க்ருதார்த்தானந்தா*

**சத்தியத் தேடல்:**

நம் புரிந்து கொள்ளும் சக்தி அதிகரிக்க அதிகரிக்க, நாம் மேலும் மேலும் உயர்ந்த சத்தியங்களைப் புரிந்து கொள்வோம். இதன் பொருள் என்ன? நாம் புரிந்து கொள்ளும் அளவு அதிகரிக்கும் போது, நம் சத்தியத்தேடல் அதன் விளைவான சாதனைகள் அதிகரிக்கும். எது எப்படி ஆயினும் நாம் சத்தியத்தைத் தேடுவதை நிறுத்தி விடக்கூடாது. நாம் சத்திய சோதனையை எப்படி நடத்த வேண்டும்? அந்தத் தேடல் உறுதியுடன் நீடித்து, நிற்க வேண்டும், ஒருமுனைப்பாங்குடன் இருக்க வேண்டும் என்றெல்லாம் நம் குருமார்கள் சொல்லுகின்றார்கள். சுவாமி விவேகானந்தரின் கூற்றுப்படி "கருதிய காரியம் கைகூடும் வரை நில்லாது உழைக்க" வேண்டும். உடனடியான லட்சியத்தை எட்டிப் பிடித்த பின் அதற்கடுத்த உயர் லட்சியத்தை எய்தும் வேட்டையைத் துவங்கி விட வேண்டும். வாழ்க்கையின் இறுதி லட்சியத்தை நாம் அடையும் வரை, இந்த தேடுதல் இடைவிடாது நடந்து கொண்டே இருக்கும். ஒவ்வொரு தனி நபரும் இப்போது இருக்கும் நிலைக்கேற்ப உடனடி லட்சியங்கள் மாறுபடும். ஆனால் அனைவருக்கும் இறுதி லட்சியம் ஒன்றே தான்.

சத்தியத்தேடல் பற்றி ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு கதை சொல்லுகின்றார். ஒரு ஏழை விறகு வெட்டி அடர்ந்த காடு ஒன்றில் விறகு வெட்டிப் பிழைத்து வந்தான். ஒரு நாள் அவன் விறகு வெட்டப்போகும் போது ஒரு புனித குருவைச் சந்தித்தான். அந்த ஏழைக்கு செலவுக்கேற்ற வருமானம் கிடைக்கவில்லை என்று அந்தப் புனித குரு அவனிடம் கேட்டு அறிந்தார். அந்த ஏழை விறகு வெட்டியின் பால் கருணை கொண்டார் அம்மனிதர். விறகு வெட்டி புறப்படுமுன் புனிதரிடம் அறிவுரையை வேண்டினான். புனிதர் "மகனே! முன்னேறிச் செல்! லட்சியத்தை எட்டும் வரை நிற்காதே" என்று அறிவுரை கூறினார். விறகு வெட்டிக்கு இச்சொற்கள் மந்திரமாக அமைந்து அற்புதம் விளைவித்தன. அடுத்த நாள் அவனுக்கு, காட்டுக்குள் இன்னும் அதிக தூரம் நுழையும் ஆவல் ஏற்பட்டது. அவ்வாறு அவன் செய்கையில் அவன் சந்தனமரங்கள் அடர்ந்த காட்டைப் பார்த்தான். அவனுக்கு மகிழ்ச்சி பொங்கிற்று. அதில் அவனுக்குப் பெரிய அளவில் பணம் கிட்டியது. அவன் நிலைமை முன்னேறியது. சில நாட்கள் கழித்து அவனுக்குத் திரும்பவும் நினைவு வந்தது. "அப்புனிதர் என்னை நின்று விடும்படிக் கூறவில்லையே! நாளைக்கு




நான் இன்னும் அதிகதூரம் இக்காட்டுக்குள் செல்வேன்! அவன் தைரியம் கொண்டு மறு நாள் காலையே, அவன் தான் இது வரை சென்றறியாத தூரத்திற்கு, அக்காட்டுக்குள் சென்றான். அந்த புதிய சாகசப் பணி அவனுக்கு ஒரு தாமிர (செப்பு)ச் சுரங்கத்தைக் காட்டித் தந்தது. அவனுடைய மனமகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை! அவன் இன்னும் பெரிய செல்வந்தன் ஆகிவிட்டான். அப்புனிதரின் பணியால் அவனுக்குப் பெருலாபம் கிட்டியதை எண்ணி தன் மனமாற அவருக்கு நன்றி கூறினான். இவ்வாறு சில காலம் கழிந்தது. மறுபடியும் அவனுக்கு உள்ளே இருந்து ஏதோ ஒரு சக்தி இன்னும் ஆழமான தேடுதலை மேற்கொள்ளுமாறு அவனைத் தூண்டிற்று. அப்புனிதரின் உபதேசத்தை அவன் மறக்கவே இல்லை. இப்போது, அவன் கடப்பதற்கரிய தூரங்களைத் தாண்டிப் போனான். அங்கே அவனுக்கு ஒரு வெள்ளிச் சுரங்கம் தென்பட்டது. அது அவன் நிலைமையை இன்னும் மேம்படுத்திற்று. ஆயினும் அப்புனித மனிதரின் உபதேசம் அவன் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருந்தது. அது அவனைச் சும்மா உட்காரவே விடவில்லை. ஆகவே அவன் தேடலைத் தொடர்ந்து முன்னேறினான். தங்கச் சுரங்கங்களைக் கண்டான், வைரச்சுரங்கங்களை அடைந்தான். அந்த ஏழை விறகு வெட்டி எவ்வளவு செல்வம் பெற்றிருப்பான்! எண்ணிப் பாருங்கள்! அதற்கெல்லாம் காரணம் அவன் அப்புனிதர் கூறிய உபதேசத்தைப் பின்பற்றினான். “முன்னேறிச்செல்” என்பதே அவ்வுபதேசம்.

ஒரு விஷயத்தை நினைவில் வைத்திருக்க வேண்டும். இக்கதையைக் கூறியது, சத்தியத்தேடலுக்குத்தான். இக்கதை செல்வத் தேடலைக் கூறுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. போட்டி உலகிலும் கூட சத்திய விதி வேலை செய்யவே செய்கிறது. உதாரணமாக, பணம் சம்பாதிக்க விரும்பும் ஒருவர் அதன் நுணுக்கங்களை உணர்ந்திருக்க வேண்டும். போட்டியில் பிறரை முந்திக் கொண்டு செல்வது எப்படி என்று அவர் அறிந்திருக்க வேண்டும். போட்டிக் களத்தில் இருந்து விலகிப்போய், இறையருளை நம்பி எதிர்பார்த்து, நேர்மையற்ற வழிகளில், பிறரை முழங்கையால் இடித்துத் தள்ளுவது தவறு என்று கூறினால் வேலை நடக்காது. வாழ்க்கையில் ஒவ்வொரு தளத்திலும் அதற்குப் பொருத்தமாக சத்தியம் வெளிவந்து வேலை செய்கிறது. ஒன்று நீங்கள் அதன்படி வாழ்ந்தாக வேண்டும். அல்லது அதற்கும் மேலான தளத்திற்குப் போவதற்காக அதைப் புறக்கணித்து விடவேண்டும். ஆனால் இவ்வாறு நடப்பதில்லையே! நம்மில் பெரும்பான்மையினர் பிறருடைய சாதனைகளைக் கண்டு பொறாமைப் படுகின்றோம். அல்லது இறைவனையோ, நம் தலைவிதியையோ குற்றம் சொல்கிறோம். நம் துர்ப்பாக்கியம் தோல்வி இவற்றுக்குக் காரணம் கற்பிக்கிறோம். ‘சத்தியமே ஜயதே’ சத்திமே வெல்லுகிறது என்று கூறக் கேட்கும் போது, ஒரு குறிப்பிட்ட தூரத்தில் புரிந்து கொள்ளப்படும் சத்தியம் என்று அதனைப் பொருள்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நுணுக்கத்தை நாம் அறிந்து கொண்டால், நாம் ஒருபோதும் தன் தோல்விக்கு பகவானைக் குற்றம் சொல்லமாட்டோம். சத்தியத்தை மனப்பூர்வமாகத் தேடும் எவரும் அதை அடைந்தே தீருவர் என்று உறுதியாக அறிவோம்! (கட்டுரை தொடரும்)

# வெள்ளைத்தாமரையின் இதழ்கள்

**ஆன்மீக வினாவிடை** ஐந்தாம்பாகம் சுவாமி கமலாத்மானந்தர், ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், பெரிய நாயக்கன் பாளையம், கோயம்புத்தூர் 641 - 620 பக்கம் 10+362 விலை ரூ.70/-.




பாரதத்தின் பண்பாட்டிலும் ஹிந்து தர்மத்திலும் வினாவிடைகட்குப் பெருமுக்கியத்துவம் உண்டு. சீடன் குருவை அணுகிக் கேள்வி கேட்பதை சிஷ்ய தருமத்தின் கடமைகளில் ஒன்றாக கீதை கூறுகிறது. பிரச்ன உபநிஷதம் கேள்விபதில் வடிவில் அமைந்தது. ஜனக மகாராஜர், நினைத்தபோது கேள்விகேட்கும் உரிமையை ஒரு வரமாக யாஜ்ஞவல்கியரிடம் பெற்றிருந்தார். பிரம்மசூத்ம பாஷ்யம், சைவசித்தாந்தம் ஆகியவற்றில் தடை விடை என்ற பெயரில் எதிராளி எழுப்பக் கூடிய தடைகளை உரையாசிரியரே எழுப்பி அவற்றுக்குச் சமாதானமும் கூறிவிடுவார். கடோபநிஷதத்தில் நசிகேதன் கேள்விகேட்கும் திறமையைப் பார்த்து யமராஜன் எனக்கு உன்னைப்போல் கேள்விகேட்கும் மாணவர்கள் நிறையக் கிடைக்கட்டும் என்று விருப்பம் தெரிவிக்கிறான். “நிறையக் கேள்விகள் கேட்கிறாய். பிரம்மவானாக ஆவாய்” என்று ஆசி கூறும் குருமார்கள் உண்டு. அண்மைக் காலத்தில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் அன்பர்கள் கேட்கும் கேள்விகட்கு பதில் கூறி மஹா உபகாரம் செய்து வந்தார். இன்று ஆன்மீகப் பத்திரிகைகளில் வினாவிடையே இன்றியமையாத பகுதி ஆகிவிட்டது. பத்திரிகைகளின் பழைய பிரதிகளில் முடங்கித் தொலைந்து போகாமல் வினா விடைகளைத் தொகுத்துத் தரும் நற்பணிகள் நன்கு நடக்கின்றன.

விஷயங்களை வகைப்படுத்தி, வரிசைப்படுத்தித் தருவது ஒரு வித அழகு. வாசகர்கள் கேட்கின்ற வரிசையில் ஒவ்வொரு விடையும் தனித்துத் திகழும்படி விட்டுவிடுவதும் இன்னொரு அழகு.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகையில் பல ஆண்டுகளாக வாசகர்களின் ஐயங்களைத் தீர்த்து வரும் சுவாமி கமலாத்மானந்தரின் விடைகள் தொகுக்கப்பட்டு முதல் நான்கு பகுதிகள் வந்தவற்றை இப்பகுதியின் மதிப்பீடு

செய்திருந்தோம். இப்போது வாசகர்களின் அதிருஷ்டத்தினால் ஐந்தாம் பகுதியும் வெளிவந்துவிட்டது.

வினாவிடைகளில் வாசகர்களின் நேரடி அணுகுதல் இருக்கும்; பல்சுவை இருக்கும்; ஒரு பிரச்சினையை பல கோணங்களில் பார்க்கின்ற பார்வை இருக்கும். இவையனைத்தும் ஆசிரியரைத் தூண்டி அவரிடம் இருந்து சுவாரசியமான பதில்களை வரவழைப்பதை இத் தொகுப்பில் நாம் காணலாம்.

107 தலைப்புக்களில் 632 கேள்வி பதில்கள் இப்பகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன இறைவன், ஹிந்து தெய்வங்கள், மகான்கள், ஆன்மீக சாதனை, ஹிந்து மரபு, ஒழுக்கம், அறம் போன்ற தலைப்புக்களில் விடைகள் அமைந்துள்ளன.

குருவிடம் இருந்து நல்ல பதிலை வரவழைக்கும் கேள்வியே நல்ல கேள்வியாகக் கருதப்படுகிறது. வளமான தகவல்கள், நேரிடையான பதில்கள், சுற்றி வளைக்காத பேச்சு, கூரறிவு, வாசகர்பால் மனப்பூர்வமான அன்பு, அவர்கள் வளர்ந்துருவாக வேண்டும் என்ற உண்மை விருப்பம் ஆகிய சிறப்புக் குணங்களை இப்பதில்கள் காட்டுகின்றன.

சாஸ்திர பூர்வமான விளக்கங்கள், பொருத்தமான மேற்கோள்கள், சுவைபடக் கூறுதல் ஆகியவை இந்நூலின் பயனை உயர்த்துகின்றன. குருதேவர், அன்னையார், சுவாமிஜி ஆகியோரின் கருத்துக்கள் நிறையக் காணக்கிடைப்பது இயல்புதான்.

ரத்தினச் சுருக்கமான பதில்கள் உண்டு (26) கேள்வி. ஆன்மீக வாழ்க்கையின் சாரம் என்ன? பதில் மனத்தூய்மை. குரு பற்றிய கேள்விக்குப் பதிலோ 12 பக்கங்கள் நீளும். இத்தகைய பதில்கள் பல கேள்விகளின் பதில்களின் தொகுப்பாக இருக்கக் கூடும்.

நல்லாசிரியர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதற்கும், அவர்கள் கடிதங்களைப் படிப்பதற்கும் வேறுபாடு உண்டு. அதே போல் வினா விடைகட்கும் தனித்தன்மை ஒன்று. சொற்பொழிவுகள், கட்டுரைகள் பொதுவாக அனைவருக்குமான விஷயங்களைக் கூறும். கடிதங்களும் விடைகளும், தனிமனிதரை ஒரு லட்சியமாகக் கொண்டு அவரை மதித்து, அவரருகில் வந்து அவரைக் கைதூக்கிவிடும்.

முந்தைய பகுதிகளைப் போலவே ஐந்தாம் பகுதியும் ஒரு அருட்கொடையாக, தகவல் களஞ்சியமாக, சுவாரசியம் குன்றாததாக விளங்குகிறது. மிஷன் நூல்கட்கே உரிய அழகிய பதிப்பு, தெளிவான அச்சு, சலுகை விலை.

திரும்பத் திரும்ப ஓதவும், உற்றவர்க்குப் பரிசாக அளிக்கவும் உகந்த நூல்!

# கேந்திர நிறுவனர் மா. ஏக்நாத்ஜியின் புனித வாழ்க்கை வரலாறு

## ஏக்நாத்ஜி

**ஆங்கிலம் : நிவேதிதா ரகுநாத் பிடே**
**தமிழ்: பொ. தங்கசுவாமி**




ஏக்நாத்ஜி ஓய்வில் இருந்தமையால், அவர் அன்றாடப் பணிகளில் ஈடுபட்டிருக்கவில்லை. அந்நாட்களில் கேந்திரம் நிதிப் பற்றாக்குறையால் அவதிப்பட்டது. எனவே, நஷ்டத்தில் நடந்து கொண்டிருந்த இந்தி மாதப் பத்திரிக்கையை மூடிவிட முடிவு எடுக்கப்பட்டது. இதைக் கேள்விப்பட்ட ஏக்நாத்ஜி திகைப்படைந்தார். நிதிப் பற்றாக்குறையால் எந்தப் பணியையும் மூடிவிடுவது அவருடைய இயல்பு அல்லவே. அந்தப் பத்திரிக்கை தொடர்ந்து நடக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். வரும் நாட்களில் விவேகானந்தபுரத்திற்கு அபாயம் ஏற்படப் போவதை அவர் உணர்ந்ததால் உடனேயே மதில் சுவர் கட்டும் பணியைத் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஒரு சில மாதங்களுக்குள் அவர் கூறியது சரி என்பது நிரூபணமாயிற்று. இந்து-கிறிஸ்தவர்களிடையே கலவரம் ஏற்பட்டது. குறைந்தது இரண்டு தடவைகள் விவேகானந்தபுரத்தைத் தீயிட்டு அழிக்க முயற்சிகள் நடந்தன. எப்படி ஏக்நாத்ஜியால் ஊகிக்க முடிந்தது என்பது உண்மையிலேயே ஆச்சரியப்படத்தக்க விஷயம் தான். இருப்பினும், மதில்சுவர் எழுப்ப பத்தொன்பது லட்சம் ரூபாய் தேவைப்படும் என்றும் கேந்திரம் நிதிப் பற்றாக்குறையை எதிர்கொண்டிருக்கும் இத்தருணத்தில் இது சாத்தியமாகாது என்று அப்போது தொண்டர்கள் உணர்ந்தனர். இத்தகைய சில உதாரணங்களால் கேந்திரத் தொண்டர்கள் சிலரும் அவரது சங்க நண்பர்களும் ஒருவேளை ஏக்நாத்ஜி தன் பிணியின் தன்மையால் உண்மைநிலையை உணர்ந்திருக்கவில்லை என்று கருதினர். அவர்களால் அவரைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவரைப் பொறுத்தமட்டில், அவரது திட்டத்தில் பணம் ஒரு போதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததில்லை. அவர் சுவாமி விவேகானந்தரின் வாக்கைத் திடமாக நம்பினார் - "மனிதர்கள், மனிதர்கள், மனிதர்கள் மட்டுமே தேவை. மற்றவை எல்லாம் தானே வரும்". ஒரு வேளை, ஏக்நாத்ஜியும் அவருடைய அவசரத்தில் அப்படிப்பட்ட சவால்களை எதிர்கொள்ள கேந்திரத் தொண்டர்கள் இன்னும் வளர்ச்சி அடையவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளத் தவறினார்.

வேலைப்பளு ஏக்நாத்ஜியின் உடல்நலத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடாது என்று கருதிய தொண்டர்கள் அவர் முழு ஓய்வெடுக்க வேண்டும் என்று விரும்பினர். முந்தைய காலகட்டங்களில் அவர் சுகவீனத்தை எவ்வாறு கையாண்டார் என்பதைப் பற்றிய முழுப் பின்னணியையும் தொண்டர்கள் அறிந்திருக்கவில்லை. ஓய்வெடுங்கள் என்று அவர்கள் வற்புறுத்தியது அவரை அமைதியின்மைக்குத்தான் இட்டுச் சென்றது. அமைதியின்மை அதிகரிக்க அதிகரிக்க, ஏக்நாத்ஜியின் அடம்பிடிக்கும் தன்மை அதிகரித்தது. அப்போதிருந்த தொண்டர்கள் குழுவை மாற்றி அமைத்தால் அவரை முழு ஓய்வெடுக்குமாறு கூற மாட்டார்கள் என்றும் ஆனால் உதவிடும் வகையில் பணியாற்றிட அனுமதிப்பார்கள் என்றும் அவர் நினைத்தார்.

இருப்பினும் ஒரு பொதுக்குழு கூட்டத்தில் ஆழ்ந்த ஆலோசனைக்குப்பின் அதே தொண்டர்கள் குழுப் பணியை முன்னோக்கி எடுத்துச் செல்வதே சரியென்று அவர்கள் கருதி, அவருடைய விருப்பத்திற்கு மாறாக, ஏக்நாத்ஜியை இசைச் செய்தனர். சில தொண்டர்கள் நடந்த நிகழ்வுகளால் ஏக்நாத்ஜி மிகவும் நொந்து போயிருப்பார்கள் என்று கருதி அவருக்கு ஆறுதல் கூறும் நோக்கத்தோடு அவரிடம் சென்றனர். ஆனால் அவர்கள் ஆச்சரியம் அடையும் வகையில் அவர் நகைச்சுவை உணர்வுடன் இருந்தார். அவருக்கு ஆறுதல் கூற வந்தோம் என்பதையே அவர்கள் மறந்து போகும் அளவிற்கு அவர்களை சிரிக்க வைத்தார். அவர் எடுத்துக் கொண்ட காரியத்தை நிறைவேற்றுவதற்காக எப்போதும் தீவிரமாக ஈடுபடுவார். ஆனால் அது நிறைவேறவில்லையெனில், உண்மையான கர்மயோகியான அவர் அதை இறைவனின் பிரசாதமாக ஏற்றுக் கொள்வார். இருப்பினும் அவருடைய முயற்சிகள் நின்று போகாது. பிறருடைய விருப்பத்தை ஏற்று, தினசரி ஸ்தாபனப் பணிகளைத் தவிர்த்துவிட்டு பிற பணிகளில் கூடுதல் கவனம் செலுத்த முடிவெடுத்தார். பணி செய்ய உறுதியுடன் சரியான தருணத்திற்காக காத்திருக்கும் பொறுமையும் அவரிடமிருந்தது. அவருக்கு தோல்வியோ அல்லது பின்னடைவோ இல்லை. தடைகளை எல்லாம் நல்ல வாய்ப்புகளாக மாற்றிய அவருக்கு வெளிப்படையான தோல்வியும் பின்னடைவும் அவருடைய கருத்துக்கள் பின்பு நன்கு புரிந்து கொள்வதற்கும் நிறைவேற்றுவதற்குமான ஓர் காத்திருக்கும் காலமே. எனவே எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட பின் வெற்றியை அடைய முடியவில்லை என்றால் மீண்டும் முயன்றிடத் தேவையான பொறுமை அவரிடமிருந்தது. இவ்வாறு அவர் ஒரு விடாமுயற்சியுள்ள, தளராத வீரராக விளங்கினார்.

அவர் இதயம் விசாலமானது. அங்கு எல்லோருக்கும் இடமுண்டு. எந்த ஒரு தொண்டரையும், எவ்வளவுதான் இளையவராக இருந்தாலும் அவர் மரியாதை குறைவாக ஒரு போதும் அவர் பேசமாட்டார். முன் வைத்த ஒவ்வொரு விஷயத்தையும் அவர் உன்னிப்பாகக் கவனித்தார். எந்தவிதக் காழ்ப்புணர்ச்சிக்கும் இடங்கொடாத இத்தகைய இதயத்தைக் காண்பது அரிது. அவர் ஒரு மிகச்சிறந்த அறிவாளி. அதற்கும் மேலாக அவர் ஒரு மிகப்பெரிய இதயத்திற்குச் சொந்தக்காரர்.

ஏக்நாத்ஜி புரிந்து கொள்ள இயலாதிருந்தால் அவர் அதைப் பெரிதாக எடுத்துக் கொண்டதில்லை. அவர் அவருடைய காலத்தை விஞ்சி நின்றார். அவர் ஒரு முன்னோடி. எனவே அவர் இயல்பாகவே பல கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர்தான் முதன்முதலில் நம் நாட்டில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து தொண்டுப் பணி செய்யும் ஒரு ஸ்தாபனத்தைத் தொடங்க துணிவு கொண்டவர். உலகம் விளம்பர சகாப்தத்தினுள் நுழைந்து கொண்டிருப்பதால், ஸ்தாபனத்தை உலகம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக ஆக்கவேண்டியதன் அவசியத்தை அவர் புரிந்து கொண்டார். எனவே நாம் நம்மை அறிமுகப்படுத்த தேர்ந்தெடுக்கும் சொற்கள், ஒருவராலும் எதிர்ப்புத் தெரிவிக்க இயலாத வகையில் அமைந்திருக்க வேண்டும் என்பதை அவர் உணர்ந்தார். உண்மையில் தாம் பிறரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்புவோர் மிகவும் கவனத்துடன் இருக்கவேண்டும். அவர் போதுமான நீண்ட ஆயுளுடன் இருந்திருந்தால் இதையும் அவர் கவனத்தில் கொண்டிருப்பார். நாட்டின் புனர் நிர்மாணப் பணியில் பழங்கால ரிஷிகளைப் போன்று கணவனும் மனைவியும் தொண்டு செய்யும் வகையில் ஒரு ஸ்தாபனத்தை தொடங்கியதிலும் அவர் ஒரு முன்னோடியே. ஆனால் ஸ்தாபனத்தின் தூய்மையை காப்பாற்றும் விதமாக ஆயுட்காலத் தொண்டர்களுக்கிடையே திருமணம் செய்து கொள்வது தடை செய்யப்பட்டது. இந்த சமநிலைப்படுத்துதல் மிகவும் கடினமானதாகும். இது முயற்சிகளாலும் பரிசோதனைகளாலும் மட்டுமே வெற்றி பெறவேண்டியதாயிற்று.

வாழ்க்கை முழுவதையும் அரசியல் வியாபித்து வரும் காலக்கட்டத்தில் தேசீய பிரச்சினைகளின் நலனுக்காக அவர் அரசியலை ஒதுக்கித் தள்ளினார். அவசர நிலை காலகட்டத்தில் கேந்திரத்தை பாதுகாக்க அவர் எடுத்த முடிவு மிகவும் சவாலான ஒன்றாகும். சத்திரபதி சிவாஜியின் வாழ்வில் காண்பது போன்று உலகாயத அறிவும், தீவிர லட்சியமும், கொள்கையில் விட்டுக் கொடுக்காத் தன்மையும், அதே நேரத்தில் மனித இயல்பை புரிந்துகொள்ளும் தன்மையும் கொண்டிருந்தவராக ஏக்நாத்ஜியும் காண்கிறோம். சில நேரங்களில் அவருடைய நண்பர்கள் அல்லது தொண்டர்கள் சிலர் அவரைப் புரிந்து கொள்ள முடியாமல் போனது இயற்கையே. ஆனால் வரும் காலகட்டத்தில் இத்தன்மை புரிந்துகொள்ளப்பட்டு விடும் என்பதை அவர் அறிந்திருந்தார். பணியின் நிமித்தமாக பிறர் புரிந்துகொள்வதால் ஏற்படும் மகிழ்ச்சியைத் துறக்க அவர் தயாராகவே இருந்தார்.


## பெட்டிச் செய்தி

**ஸ்ரீ ஏக்நாத்ஜி** என்ற இந்த வாழ்க்கை வரலாற்று நூல் புத்தக வடிவில் **விவேகானந்த கேந்திரப் பிரகாசன் டிரஸ்ட், 5, சிங்கராச்சாரி தெரு, சென்னை - 600 005** என்ற முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. **விலை ரூ. 70/-**

**13/10/2011, சகோதரி நிவேதிதை இறைவனடி சேர்ந்ததன் நூற்றாண்டு அஞ்சலி**

# சகோதரி நிவேதிதை

*திருமதி வி. ஜானகி புஷ்பம்*



## நிறைவான வாழ்வின் பூரணத்துவம்

பாரத நாட்டில் யாத்திரை செல்லவேண்டிய ஸ்தலங்களில் புனிதம் மிக வாய்க்கப்பெற்றது இமயமலையாகும். அம்மலையில் காஷ்மீரத்தில் உள்ள அமர்நாத்திற்கு சுவாமி விவேகானந்தருடன் நிவேதிதை யாத்திரை போய் வந்த பிறகு அவள் இந்தியாவிற்கு ஆற்றவேண்டிய அரும்பணிகளில் இறங்கினாள். அப்பணிகளை எல்லாம் அவள் திறம்படச் செய்தாள். பல துறைகளில் இந்தியாவின் புத்துயிர்க்கு ஏதுவான இயக்கங்களை சகோதரி துவங்கி வைத்தாள். இனி அந்த இயக்கங்கள் தாமே வலிமை பெற்று வளர்ந்து வரும். இனி திருக்கேதாரேஸ்வரத்திற்கும் பத்ரிகாசிரமத்திற்கும் ஸ்தல யாத்திரை செல்ல வேண்டுமென்று நிவேதிதை தீர்மானித்தாள். 1910 ம் வருடம் மே மாதம் 15-ந் தேதி நிவேதிதையுடன் ஜகதீஸ் சந்திர போஸ், அவரது மனைவியான திருமதி அபலாபோஸ் மற்றும் அவர்களது உறவினரான அரபிந்தோ மோகன்போஸ் ஆகியோரும் புனிதயாத்திரை புறப்பட்டனர். ஹரித்துவாரத்தை வந்தடைந்ததும் இந்தியாவின் பல பாகங்களில் இருந்து வந்திருக்கும் யாத்ரீகர்களின் கூட்டத்தைக் கண்டு நிவேதிதை மிகவும் வியப்படைந்தாள். வட இந்திய மக்களையும் தென்னிந்திய மக்களையும் இணைக்கும் சக்தியாக இந்த யாத்திரை ஸ்தலத்தை அவள் உணர்ந்தாள். பக்தர்கள் கூட்டங்கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். ஒருவர் மற்றவரை சந்திக்கும் போது உற்சாகமாக உரத்தகுரலில் ‘ஜய் ஸ்ரீ கேதார்நாத் சுவாமிக்கு ஜய்’ என்றும் ‘ஜய் பத்ரி பிஷால்லால்கி ஜய்’ என்றும் கோஷமிட்டனர். ஒவ்வொரு புனித இடமாகச் சென்று, நிவேதிதை பாரதத்தின் இயற்கை வனப்புக்களை ரசித்து மகிழ்ந்தாள். இரவு நேரத்தில் யாத்ரீகர்களுடன் தர்ம சாலாவில் நிவேதிதைக் குழுவினர் தங்கினர். இன்னும் நான்கு மைல் தூரம் சென்றால் கேதாரேஸ்வரத்தை அடைந்துவிடலாம். பாதை மிகவும் கடினமாக இருந்தது. பனிப்பாறைகளில் வழுக்கி விடாமல் மெதுவாகச் செல்ல வேண்டியது இருந்தது. ஆனால் அந்த இடமும் சூழ்நிலையும் நிவேதிதைக்கு மிகவும்

பிடித்திருந்தன. கேதாரேஸ்வரர் கோவிலை நெருங்க நெருங்க நிவேதிதையின் உள்ளம் பக்தியால் நெக்குருகியது. ஆயிரக்கணக்கான பக்தர்களின் 'ஜெய் ஸ்ரீகேதாரேஸ்வரருக்கு ஜெய்' என்ற கோஷ முழுக்கம் விண்ணை அதிரச் செய்தது. குளிர்ந்த மேகங்களால் அந்த இடம் முழுவதும் மூடப்பட்டிருந்தது. மாலையில் நட்சத்திரங்கள் மின்ன ஆரம்பித்ததும் பனி மேகங்கள் மெல்ல மெல்ல விலகின. மாலை ஆரத்தி நேரம் நெருங்கியது. கோவில் மணியின் நாதம் அனைவரின் காதுகளிலும் கம்பீரமாக ஒலிக்க, பக்தர்கள் கோவிலினுள் நுழைந்து, கேதாரேஸ்வரரை தரிசித்தனர். நிவேதிதை புற உலக நினைவின்றி சிவசாயுஜ்ஜியத்தில் நிலைத்து விட்டாள். "இது என் வாழ்வின் ஒளிமயமான நேரம்" என நிவேதிதை நினைத்துக் கொண்டாள்.

அடுத்து பத்ரி காசிரமத்திற்கு நிவேதிதை குழுவினர் புறப்பட்டனர். செல்லும் வழியில், கண் சரியாகத் தெரியாத இரண்டு வயதான மூதாட்டிகள் கடினமான பனிப்பாறைகளில் மிகவும் சிரமப்பட்டு நடந்து கொண்டிருந்தனர். நிவேதிதை அவர்களிடம், "அம்மா! நான் உங்களுக்கு உதவி செய்யட்டுமா?" என்று கேட்டாள். அவர்கள் நிவேதிதையிடம், "மிக்க நன்றி அம்மா. நீங்கள் சிரமப்பட வேண்டாம். நாராயணன் எங்களை வழிநடத்திச் செல்கிறார்," என்று கூறினார்கள். அவர்களின் பக்தி, தெய்வ நம்பிக்கையைக் கண்டு, நிவேதிதை மலைத்துப் போனாள். ஜூன் 13-ந் தேதி காலை குழுவினர் பத்ரிகாசிரமம் வந்து சேர்ந்தனர். பத்ரி நாராயணனை தரிசித்து அவள் காலைப் பிரார்த்தனை செய்தாள். மூன்று நாட்கள் அவர்கள் அங்கு தங்கியிருந்தனர். இந்தப் புனித யாத்திரைகள் நிவேதிதையின் உள்ளத்தைப் பேரானந்தத்தில் திளைக்கச் செய்தது.

புனித யாத்திரையை முடித்துவிட்டு கல்கத்தா திரும்பிய நிவேதிதைக்கு, அவளது மிகவும் நெருங்கிய தோழியான, சுவாமி விவேகானந்தரால் 'தீரமாதா' என்று அழைக்கப்பட்ட மிஸஸ். சாராபுல் மிகவும் உடல்நிலை மோசமான நிலையில் உள்ளாள் என்ற தகவல் கிடைத்தது. அவளைக் காண நிவேதிதை உடனடியாக அமெரிக்கா சென்றாள். மிஸஸ் புல் அவர்களின் உடல்நிலை தேற, பிரார்த்தனை செய்வதற்காக, நிவேதிதை அங்குள்ள சர்ச்சுக்குச் சென்றாள். சர்ச்சில் மேரி அன்னையைத் தரிசித்துக் கொண்டிருக்கும் போதே மேரி அன்னையின் முகம் மறைந்து, அங்கு அன்னை சாரதாதேவியின் கருணை ததும்பும் முகம் அவள் முன் தோன்றியது. அவள் அன்னையிடம், "அம்மா! உங்கள் சான்னித்யம் மட்டுமே சாராவின் மனதிற்கு அமைதியையும் இதத்தையும் தரவல்லது," என்று கூறி, சாராவிற்காக பிரார்த்தனை செய்தாள். நிவேதிதை சாராவிற்குப் பணிவிடை செய்தாள். இதை சாராவின் மகள் ஒலிவாவும், சாராவின் சகோதரனும் விரும்பவில்லை. சாராவின் உடல்நிலை மிகவும் நலிவடைந்தது. 1911-ம் வருடம் ஜனவரியில் சாரா உயிர் நீத்தாள். சாரா உயிர் நீத்த பின், அவளுடைய மகள் ஒலிவா, நிவேதிதை பெண்கள் பள்ளிக்கும் மற்றவைகளுக்கும் அளித்து வந்த பண உதவியை நிறுத்தி விட்டாள். தனி ஒருவரைச் சார்ந்து எந்த ஒரு பொதுநலப்பணியும் இருக்கக் கூடாது, நிரந்தரமான ஏற்பாட்டின் அடிப்படையிலேயே பொதுநலப்பணி

துவங்க வேண்டும் என்ற உண்மையை நிவேதிதை உணர்ந்து கொண்டாள். மிகுந்த மன வருத்தத்துடன் அவள் கல்கத்தா திரும்பினாள்.

1911 ஜுலை 25-ம் தேதி சுவாமி விவேகானந்தரின் தாயார் காலமான போது, நிவேதிதை உடனிருந்து அவரின் உடல் தகனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை பக்தி சிரத்தையுடன் செய்தாள். அதற்கு இரண்டு நாட்களுக்குப்பின், புவனேஸ்வரின் தேவியின் தாயாரும் இறைவனடி சேர்ந்தாள். மிஸஸ். புல்லின் மகள் ஒலிவா இறந்த செய்தி கேட்டு நிவேதிதை மிகவும் வருந்தினாள். ஆகஸ்ட் 21-ந் தேதி சென்னையில் சுவாமி ராமகிருஷ்ணானந்தா இறைவனடி சேர்ந்தார். சுவாமிஜியின் பணியை பதினான்கு வருடங்கள் சென்னையில் திறம்படச் செய்த கர்மயோகி ராமகிருஷ்ணானந்தரின் மறைவு நிவேதிதையைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவளின் அன்பிற்குரியவர்கள் ஒவ்வொருவராக உயிர்துறந்த நிகழ்ச்சி நிவேதிதையைப் பெரிதும் பாதித்தது. தன் குருநாதரின் விருப்பத்தை நிறைவேற்ற, தான் இறக்கும் வரை தொடந்து பணியாற்றவே நிவேதிதை விழைந்தாள், நிவேதிதை ஒரு முறை கெய்ரா என்ற கிரேக்க கைரேகையாளரைச் சந்தித்த போது, அவர் நிவேதிதையின் கைரேகையைப் பார்த்து, "உன் ஆயுள் நாற்பத்திரண்டு அல்லது நாற்பத்தி நான்கு வரை உள்ளது", என்றார். இதை நினைவில் கொண்ட நிவேதிதை தன் தோழிக்கு எழுதிய கடிதத்தில், "எனது அற்புதமான பன்னிரண்டு ஆண்டு காலம் முடிவை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. என் வாழ்க்கையின் இருண்ட பகுதி ஆரம்பமாகிவிடும் என்று நினைக்கிறேன்", என்ற எழுதினாள். தான் துவங்கிய பள்ளிக்கும் எதிர்காலத் திட்டங்களுக்கும் நிரந்தரமான ஏற்பாடு செய்ய விரும்பினாள். நிவேதிதை இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகுக்கே வழங்கிய பெருங்கொடை அவள் எழுதிய நூல்கள் ஆகும். "நான் கண்ட குருநாதர்", என்ற தலைப்பில் அவள் எழுதிய புத்தகம் சுவாமி விவேகானந்தரின் சிறப்புக்களையும் அறிவுரைகளையும் கூறுகிறது. 'இந்தியர் வாழ்க்கைச் சிறப்பு' என்ற நூலில் இந்திய மக்களின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் சித்தரித்துள்ளாள். 'இந்திய சரித்திரத்தின் அடிச்சுவடுகள்' என்ற நூல் பாரத நாட்டுச் சரித்திரத்தை திறம்பட விளக்குகிறது. நூல்கள் எழுதியதை முன்னிட்டுத் தனக்கு வந்து கொண்டிருந்த வருவாய் முழுவதும் தான் காலமான பிறகு தான் துவங்கிய பெண்கள் பாடசாலைக்கு உரியதாக வேண்டும் என்று அவள் சாசனம் எழுதி வைத்தாள்; பேலூர் மடத்தைச் சார்ந்த மூத்த துறவியரை அதற்கு அறங்காவலர்கள் ஆக்கினாள். பள்ளிக்கூட நடைமுறைகளைப் பற்றிய பொறுப்புக்களையெல்லாம் தமது தோழிமார்களிடம் நிவேதிதை ஒப்புவித்தாள். "ஆற்றுவதற்கு பெரும்பணிகள் பல இருக்கின்றன. ஆனால் இனிக்காலமோ கைவசத்தில் இல்லை", என்றாள் அவள். நாள்தோறும் பெரும்பகுதியை தியானத்திலேயே அவள் கழித்து வந்தாள்.

கோடை விடுமுறையில் நிவேதிதை போஸ் குடும்பத்தினருடன் இமயமலையிலுள்ள மாயாவதிக்குச் செல்வது வழக்கம். இந்த முறை அக்டோபர் நவராத்திரி விடுமுறைக்கே அங்கு செல்ல நிவேதிதை தீர்மானித்தாள்.

கல்கத்தாவை விட்டு நீங்குவது இதுவே கடைசி முறையாக இருக்கும் என்ற எண்ணம் நிவேதிதைக்குத் தோன்றியது. எனவே தெரிந்தவர்கள் அனைவரையும் சென்று பார்த்து அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டாள். நிவேதிதை ஒரு நாள் பேலூர் மடத்திற்குச் சென்று, சுவாமி பிரம்மானந்தரையும் சுவாமி துரியானந்தரையும் சந்தித்து விடைபெற்றாள் பிறகு சுவாமி விவேகானந்தரின் அறைக்குச் சென்று, அமைதியாக அமர்ந்து தியானம் செய்தாள். பின்னர் அன்னையின் இல்லத்திற்கு வந்தாள். அன்னை சாரதாதேவி அப்போது ஜெயராம் பாடியில் இருந்தார். யோகின்மா என்ற மூதாட்டியிடம் நிவேதிதைக்குத் தனி பிரியம் உண்டு. நான் முன் மண்டியிட்டு வணங்கி, "யோகின்மா! நான் டார்ஜிலிங் செல்கிறேன். நான் திரும்பி வரமாட்டேன் என்று எண்ணுகிறேன்", என்றாள். கலவரமடைந்த யோகின்மா "நிவேதிதா! நீ இவ்வாறு பேசாதே. இத்தகைய எண்ணங்களுக்கு நீ இடங்கொடுக்கக் கூடாது. நீ பூரண நலத்துடன் திரும்பி வருவாய்!" என்று ஆசீர்வதித்து அனுப்பினாள். செய்து முடிக்க வேண்டிய பணிகளை ஓய்வு ஒழிச்சலின்றி நிவேதிதை செய்தாள். அவள் தோழி கிறிஸ்டைன் அவளிடம் "தங்களுக்கு உடல்நிலை சரியில்லை. சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்", என்றாள். நிவேதிதை அவளிடம், "எல்லாத் துறைகளிலும் தேசீய உணர்வை எழுப்பிவிடு. ஆன்மீகத்தையே அரசியலுக்கும் அடிப்படை ஆக்குக என்றார் என் குருநாதர். அந்த அரும்பணியைச் சிரமேற்கொண்டு முழுமனதுடன் பணியாற்ற என்னால் இயன்ற அளவு முயன்றுள்ளேன். மறுமையில் இருந்த வண்ணம் சுவாமிஜி இதை அங்கீகரித்தால் போதும். இதற்கு அன்னியமாக எந்தவிதமான சுகத்தையோ சுவர்க்க வாழ்வையோ ஓய்வு ஒழிச்சலையோ நான் நாட வில்லை. பாரதத்தாயும் பாரதப் பெண்களும் இமயமென உயர்ந்து நிற்கிறார்கள். அவர்களைப் பணிந்து வணங்குவதே என் பணி. இறுதி மூச்சுவரை ஓய்வை நினைக்காமல் உழைப்பதைத் தவிர நம்மால் பெரிதாக வேற என்ன செய்து விட முடியும்? என்று கூறினாள்.

போஸ் குடும்பத்தினருடன் நிவேதிதை டார்ஜிலிங் சென்றாள். 'ரேவில்லா' என்ற வீட்டில் அவர்கள் தங்கினார்கள். முதல் சில நாட்களை அமைதி நிரம்பிய முறையில் ஓய்வாகக் கழித்தனர். பின் சாண்டக்பூ என்ற மலைச் சிகரத்திற்குச் செல்ல முடிவு செய்தனர். புறப்படும் நாளன்று நிவேதிதைக்கு சீதபேதி கண்டது. மருத்தவர்கள் உடனடியாக வரவழைக்கப்பட்டு, சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. பயன்கிட்டவில்லை. ஜகதீஸ் சந்திர போஸும் அவரது மனைவி அபலாதேவியும் நிவேதிதைக்கு மனமுவந்து பணிவிடைகள் செய்தனர். நிவேதிதை அவர்களிடம், "நீங்கள் சிரமப்பட வேண்டாம். இந்தப்படகில் ஓட்டைகள் பல விழுந்துவிட்டன. ஆயினும் இன்னுமொரு சூரியோதயத்தை அது காணும்," என்றாள். பிரபஞ்சம் தழுவிய அன்பையும் அமைதியையும் கூறுகின்ற பௌத்ததோத்திரம் ஒன்று நிவேதிதைக்கு மிகவும் பிடிக்கும். அதை படிக்கச் செய்து கேட்டு மகிழ்ந்தாள். மரணம் அவளை மெதுவாக நெருங்கிக் கொண்டிருந்தது. உபநிடதத்தில் வரும் ருத்ரப் பிரார்த்தனையை அவள் அமைதியாகப் பாடினாள். 1911 ம் ஆண்டு அக்டோபர் 13-ம் நாள்

ஓம் அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜ்யோதிர்கமய
ம்ருத்யோர்மா அம்ருதம்கமய

உண்மையற்றதிலிருந்து எங்களை உண்மைக்கு அழைத்துச் செல்வாயாக. இருளிலிருந்து எங்களை ஒளிக்கு அழைத்துச் செல்வாயாக. மரணத்திலிருந்து எங்களை மரணமில்லாப் பெருவாழ்விற்கு அழைத்துச் செல்வாயாக என்ற பிரார்த்தனையுடன் நிவேதிதை இறைவனுடன் ஒன்றறக் கலந்து விட்டாள். கையில் ஜபமாலையுடன் பிரார்த்தனை செய்து கொண்டே அவளது ஆத்மா அகண்டாகாரத்தில் விரிந்தோடியது. பூத உடல் மண்ணில் சாய்ந்தது. அவளுடைய மறைவுச் செய்தி விரிவாகப் பரவியது. பிரபலமானவர்கள் பலர் அவளுக்கு இறுதி அஞ்சலி செலுத்த ரேவில்லாவுக்கு விரைந்து வந்தனர். இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். வானத்தைப் போல விரிந்து பரந்த நிவேதிதையின் அன்புக்கு இந்தியர்கள் தலை வணங்கி, தம் அஞ்சலியைச் செலுத்தினர். பாரத மண்ணின் மகள் விண்ணிலே கலந்து விட்டாள். டார்ஜிலிங் மலைப்பகுதியில் ரயில் நிலையத்திற்கு அருகில் செங்கற்களினால் கட்டப்பட்ட ஒரு நினைவுச் சின்னம் நிவேதிதைக்கு அமைக்கப்பட்டது. அதில், “ராமகிருஷ்ண விவேகானந்த இயக்கத்தைச் சார்ந்தவளும் இந்தியாவிற்காகத் தனது அனைத்தையும் ஈந்தவளுமான சகோதரி நிவேதிதையின் அஸ்தி இங்கே குடிகொண்டுள்ளது,” என்று எழுதப்பட்டிருக்கிறது.

அயர்லாந்தில் பிறந்து இங்கிலாந்தில் வளர்ந்து, பாரதத்தாயின் பணிக்கு தன்னை நிவேதனமாக்கிய நிவேதிதை பாரத மக்களின் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றுவிட்டாள். குருதேவர் தனக்கு இட்ட பணிகளைச் செவ்வனே செய்து முடித்து, தன்னுடைய வாழ்க்கையை ஒரு நிறைவான வாழ்க்கையாக ஆக்கிக் கொண்டாள். நிவேதிதையின் இடைவிடாத சேவையால் அவளுடைய நிறைவான வாழ்க்கை பூரணத்துவம் அடைந்தது. அங்கும் பூர்ணம்! இங்கும் பூர்ணம்! எங்கும் பூர்ணம்!!

## கன்னியாகுமரியில் கண் முகாம்







# நோயில்லா வாழ்வில் உடலில் இயற்கை வேகங்களின் பங்கு

டாக்டர் வே. கணபதி எம்.டி – சித்தா

### வாந்தி:

உடல் இயற்கை வேகங்களில் மிக முக்கியமான ஒரு வேகம் 'வாந்தி' ஆகும். சகல ஜீவராசிகளும் இதன் செயலை நன்கறிவர். பிறந்த குழந்தைகள் முதல், முதியோர்வரை, இதன் வேகத்துக்கு உட்பட்டவராவர். நோய்நிலைகளில் வரும் **வாந்தி** ஒருபுறமிருந்தாலும் தினசரி வாழ்க்கை முறையில் **வாந்தி** எனும் இயற்கை வேகம் உயிர்களை புதுப்பித்துக் கொள்ளுவதெற்கெனவும் ஏற்படுவதுண்டு. 'வாந்தி' எனும் செயல் மூலம் எண்ணிலா நோய்களைச் சரிசெய்யும் சிகிச்சை முறை நமது பாரம்பரிய மருத்துவத்தில் கூறக் கிடக்கின்றது. வாந்தி செய்வித்தலை ஒரு மருத்துவக் கலையாகக் கூறி இருப்பது இதன் தனிச் சிறப்பம்சமாகும். பேதி செய்வித்து உடலை சுத்தப்படுத்துவது போலவே வாந்தி செய்வித்தும் உடலை சுத்தப்படுத்தும் கலையை உலகுக்கே எடுத்துரைப்பது நம் பாரம்பரிய மருத்துவமாகும். இங்ஙனம் முக்கியத்துவம் வாய்ந்த கலையை நாம் அறிந்து கொள்வது நம்முடைய கடமையாகும்.

### வாந்தி என்பது:

உடலிலுள்ள தசவாயுக்களில் உதானன் எனும் வாயு இடர்ப்பட்டு வயிற்றுக்குடல் பகுதிகள், கல்லீரல், மண்ணீரல், கணையம் உள்ளிட்ட உடல் மேல் மென் உறுப்புக்களின் சுரப்புக்களோடு வாய் வழியே வெளித்தள்ளப்படும் நிலை ஆகும்.

### வாந்தியின் வகைகள்:

1. நோயுள்ள போது ஏற்படும் வாந்தி
2. நோயில்லாத போது ஏற்படும் வாந்தி

### நோயுள்ளபோது ஏற்படும் வாந்தி:

பலவிதமான நோய்நிலைகளில் முக்கியக் குறிகுணங்களில் ஒன்றாக வாந்தி உண்டாகுகிறது. (1) சிறு நீரகம் மற்றும் சிறு நீரகப் பாதைப் பிணிகள் (2) மஞ்சட்காமாலை உள்ளிட்ட ஈரப் பிணிகள் (3) வயிறு, குடல்ப் புண் பிணிகள் (4) சுரம் உள்ளிட்ட நிலைகள் (5) மூளையில் ஏற்பட்ட தாபிதங்கள் (6) விஷப் பொருட்களின் நிலையும், உணவு நஞ்சும் (7) இரத்த ஓட்ட நிலையில் மாறுபாடுகள் (8) மனநிலை பாதிப்பு (9) சில வர்ம பாதிப்பு நிலைகள் (10) வயிற்றுப்பூச்சிகளினால் ஏற்படும் வாந்தி.

## நோயில்லாத போது ஏற்படும் வாந்தி:


இயல்பாய் இருக்கும் போது சில காரணங்களினால் வாந்தி உண்டாகிறது. இருப்பினும் இதுவும் நோய் நிலைக்கு வித்தாகி விடும்.

(1) பஸ்ஸில், கடலில் பயணம் செய்யும் போது ஏற்படும் வாந்தி (2) சூல் (கர்ப்பக்) காலத்தில் உண்டாகும் வாந்தி (3) கசப்பு உணவுப் பொருட்களால் ஏற்படும் வாந்தி (4) வேண்டத்தகாததைப் பார்க்கும் போது உண்டாகும் வாந்தி (5) ராட்டினம் மற்றும் வேகமாக வட்டமாகச் சுற்றும் போதோ, அல்லது மேலிருந்து கீழே சுற்றும் போதோ உயரமான பகுதியிலிருந்து பார்க்கும் போதோ உண்டாகும் வாந்தி (6) அளவுக்கு மீறி உண்டு அதன் மூலம் தடுமாறும் போது உண்டாகும் வாந்தி (7) வலுக்கட்டாயமாக நாவின் உட்பகுதியில் அழுத்தம் கொடுத்து உண்டாக்கும் வாந்தி (8) மதுபானம் உள்ளிட்ட போதைப் பொருளால் ஏற்படும் வாந்தி. இங்ஙனம் பல காரணங்களால் வாந்தி ஏற்படுகின்றது.

## வாந்தி உண்டாகுவதன் அடிப்படைத் தத்துவம் யாது?

மலம், சிறுநீர் போலவே, வாந்தி உண்டாவதும் கழிவுப் பொருட்களை வெளிப்படுத்தவே ஆகும். உடலை இயல்பு நிலைக்குக் கொண்டுவர ஏற்படும் ஒரு முயற்சி ஆகும். சில நோய்நிலைகள் வாந்தி செய்வித்தல் மூலம் தாமாக மருந்தின்றி நோய்கள் குணமாகி விடுகின்றன. உடலில் உள்ள அளப்பறியா உஷ்ணம் தன்னிலைக்குக் கொண்டுவரப்படும். அதன்மூலம் உடலை மேம்படுத்தவும் வழிபிறக்கும்.

## வாந்தியால் ஏற்படும் நன்மைகள்:



(1) உடல் உள் உறுப்புக்கள் சுத்தம் பெறும். பலப்படும். (2) சோர்வு, தளர்ச்சி நீங்கும். (3) சீரணம் தெளிவாகும். (4) மாந்தம், பசியின்மை, தலைச்சுற்று, மனச்சஞ்சலம் நீங்கும் (5) கண் பார்வை தெளிவு பெறும். (6) உடலின் மிகுப்பட்ட பித்தக்குற்றம் குறையும். (7) உடல் இலேசாகும். உடல் பருமன் குறையும் (8) பேச்சு தெளிவாகும். (9) உடல் வியர்வை ஒழுங்குபடும். (10) மலம், சலம், கட்டுப்பாட்டுக்குள் வரும். (11) கை கால் காந்தல், மதமதப்பு நீங்கும். (12) புத்தி தெளிவாகும். (13) கவனக்குறைவு, ஞாபக மறதி விலகும். (14) நோய் நிலைகளின் போது உண்டாகும் நஞ்சு உடலை விட்டு நீங்கத் துணை புரியும். (15) சுவாச ஓட்டம் ஒழுங்கு பெறும். (16) இரத்த அழுத்தம் குறையும். இங்ஙனம் பல்வேறு சிறப்புப் பயன்கள் வாந்தியால் உண்டாகுகின்றன.

(தொடரும்)



# அலையும் துறவி

ஆர்.சி. தாணு



“சகோதர சகோதரிகளே!
சர்வ சாதாரணமாய்
சாமர்த்தியமாகப்
பேச ஆரம்பித்தவர்
சர்வ மதத்தவரையும்
சகட்டு மேனிக்குச்
சம்பிக்க வைத்தார்.
இரண்டே வார்த்தைகள்
இரண்டு லட்சம்
கிலோ மீட்டர்களை
இல்லாமற் செய்து விட்டன.
அனைவர்
உள்ளத்திலும்
ஆசனத்தில் அமர்ந்தார்.
ஆறாயிரம் பேரினை
அரை நொடியில்
அன்புக்கு
அடிமை ஆக்கினார்.
“சென்றடைந்த
சேய் மதங்களை
வழி நடத்தும்
தாய் தான்
இந்து மதம்.
சன்மார்க்க நெறியுடன்
சகிப்புத் தன்மையை
சகலருக்கும்
தந்தது இதுதான்.
அல்லலுற்றோர்க்கு
அடைக்கலம் தந்ததும்
கவலையுற்றோரைக்
காப்பாற்றுவதும்
துயர்களைத்
துடைத்தெறிவதுமே
இதன் நோக்கம்.
நதிகள்
நகரங்கள் பல
நகர்ந்து சென்றாலும்
கடைசியில்
நாடுவது
கடலைத்தானே!
சமயங்கள், பல
சமயங்களில்
சமைக்கப்பட்டாலும்
கடைசியில்
சரணடைவது
சர்வேஸ்வரனைத்தானே!
மாநாட்டில் எழுப்பும்
மகத்தான ஒலி
மதவெறியை
மாய்க்கும்
மந்திர ஒலியாக
மாற வேண்டும்” என்றார்.
இந்தியர்களை
இதுவரை
இகழ்ந்தவர்கள்,
இப்பொழுது
இந்திரலோக
சந்திரர்கள் என
இதிகாசம் பாட புறப்பட்டனர்.
இந்தியத் தத்துவம்
அந்நியரை
ஆளத் துவங்கியது.
பத்திரிக்கைப்
பக்கங்கள்
பண்டிதரின்
படங்களால்
பரவசப்பட்டன.

## விவேகானந்த கேந்திரம் – கன்னியாகுமரி

### கிராம முன்னேற்றத் திட்ட நிர்வாக அலுவலகம்

7பி, சிவந்தாகுளம் முதல் தெரு, தூத்துக்குடி – 628 003.

☎: **0461 - 2376666,** E-mail: rdp@vkendra.org


# ஆசிரியர்களுக்கான கட்டுரைப்போட்டி – 2011

அன்புள்ள ஆசிரியப் பெருமக்களுக்கு,

நமஸ்காரங்கள்.

விவேகானந்த கேந்திர கிராம முன்னேற்றத் திட்டத்தின் பணிகளில் கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள் பேருற்சாகம் காட்டி வருகின்றனர். பண்பாட்டுப் போட்டிகள், கல்லூரி மாணவர்கள் தேர்வுகள் ஆகியவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் ஆசிரியப் பெருமக்களின் பணி போற்றுதற்குரியது. அவர்கள் கேந்திரத்தோடு இன்னும் நெருங்கிய உறவாடச் செய்வதற்காக அவர்களுக்காக சிறப்பு நிகழ்ச்சிகளை கேந்திரம் நடத்த வேண்டும் என்ற ஆவலை அவர்களே வெளியிட்டார்கள். அதன்படி சமுதாயம், விஞ்ஞானம், நீதி நெறிசார்ந்த தெய்வ சிந்தனை அவற்றைப் பற்றிய கட்டுரைத் தலைப்புகளை சுழற்சி முறையில் ஆசிரியர்களுக்குக் கொடுத்து கட்டுரை எழுதச் செய்கிறோம்.

சிறப்பான ஆக்கங்கள் பரிசு பெறுவதோடு கேந்திரப் பத்திரிகையான **விவேகவாணி**யில் தொடராக வந்தும், நூல் வடிவம் பெற்றும் பாராட்டுகளுக்கு உரியதாயிருக்கின்றன. அத்தொடரில் இவ்வாண்டு

## “அறத்தையும், தெய்வ பக்தியையும் வளர்ப்பதில் தமிழ் முனிவர்களின் பங்கு”

என்ற தலைப்பை ஆசிரியர்கள் முன்வைக்கிறோம். சங்ககாலம் முதல் தெய்வத் தமிழை, அறத்தமிழை, போற்றி வளர்த்து சமுதாயத்தைப் பண்படுத்தும் புனிதப் பணியை முனிவர்கள் இடைவிடாமல் செய்து வந்திருக்கின்றனர். அவர்களுடைய பணிகளையும், தாக்கத்தினையும் பற்றிய கட்டுரைகளை வரவேற்கிறோம்.

தங்கள் அனுபவம், அறிவு நூல் அறிவு இவற்றின் அடிப்படையில் தங்கள் பரிந்துரைகள் அமைய வேண்டும். தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கட்டுரைகள் முப்பது பக்கங்களுக்கு மிகாமல் தெளிவாக எழுதப்பட்டு பள்ளி, கல்லூரி முதல்வரின் அத்தாட்சியுடன் தூத்துக்குடி முகவரிக்கு **30-11-2011** -க்கு முன் அனுப்பப்பட வேண்டும்.

## போட்டிக்கான விதிமுறைகள் பின்வருமாறு

1. தலைப்பு பொதுவாக இருந்தாலும் **பள்ளி ஆசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும் தனித்தனியே** போட்டிகள் நடைபெறும்.
2. கட்டுரைகள் தமிழிலோ, ஆங்கிலத்திலோ தெளிவான கையெழுத்தில் வரிக்கு வரி இடம் விடப்பட்டு முழு நீளத்தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
3. கட்டுரைகளின் நீளம் **30** பக்கத்திற்கு அதிகமாகக் கூடாது.
4. கட்டுரைப்போட்டிக்கு நுழைவுக் கட்டணம் எதுவும் இல்லை.
5. கட்டுரைகள் விஷயத்தெளிவு, மொழி அழகு இவற்றின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு பரிசும், **விவேகானந்த கேந்திரத்தின்** முகாம்களில் கலந்துகொள்ள வாய்ப்பும் அளிக்கப்படும்.
6. கட்டுரைகள் **30-11-2011** -க்குள் **செயலாளர், விவேகானந்த கேந்திரம், கிராம முன்னேற்றத்திட்டம், 7-பி, சிவந்தாகுளம் முதல்தெரு, தூத்துக்குடி - 628 003** என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
7. **தமிழ்நாட்டில் இருக்கும் எல்லாப் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரிய, ஆசிரியைகளும்** இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.
8. பரிசு விஷயத்தில் நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.
9. போட்டியில் கலந்து கொள்பவர்கள் **தங்கள் பள்ளி, கல்லூரி தலைமை ஆசிரியர், முதல்வரிடமிருந்து சான்றுக் கடிதம்** பெற்றுக் கட்டுரையுடன் அனுப்ப வேண்டும்.

கேந்திரத்தின் மற்ற எல்லாப் பணிகளையும் போலவே இப்பணியிலும் ஆசிரியப் பெருமக்கள் முழு உற்சாகத்துடன் பங்கேற்று தம்மையும், நாட்டையும் உயர்த்தும் பணியில் ஈடுபட அன்புடன் அழைக்கின்றோம்.

**04-07-2011**
**சுவாமி விவேகானந்தர்**
**சமாதி தினம்**

இவண்
தாய்நாட்டின் பணியில்
விவேகானந்த கேந்திரம்
கிராம முன்னேற்றத் திட்டம்
தூத்துக்குடி - 628 003.



2009 - 2010-க்கான கல்லூரி ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ஆக்கம், ஆங்கில மூலம்
**திருமதி ஏ. டார்சிஸ், தாவரவியல் துறைத்தலைவர், சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்,**
தமிழாக்கமும், சுருக்கமும்
**திருமதி செ. கலைச்செல்வா,**

# புவி வெப்பமயமாதலின் விளைவுகளும், கட்டுப்படுத்தும் முறைகளும்

**சூரியப் புள்ளிகள்:**

சூரியனின் மேல் பரப்பில் சூரியப் புள்ளிகளின் அதிகரிப்பால், அப்பகுதிகள் குளிர்வுடன் காணப்படுகின்றன. அவையே குளிர்வான வானிலையுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன, வியோமிங் பல்கலைக் கழகத்தின், வளிமண்டல அறிவியல் பிரிவின் கூற்றுப்படி.

**செயற்கைக்கோள் விவரங்கள்:**

அதிகரிக்கப்பட்ட சூரிய ஒளி மற்றும் கதிர்வீச்சு சூரியப்புள்ளிகளுடன் தொடர்புடையதாகவும், இவை மறைமுகமாக புவிவெப்பமயமாதலுடன் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் செயற்கைக்கோள் விவரங்கள் தெரிவிக்கின்றன. சூரியப்புள்ளிகள் 11 வருட சுழற்சிகளைக் கொண்டுள்ளன. அதன் மூலம் புவிவெப்ப மயமாதலையும் ஏற்படுத்துகின்றன. புவிவெப்பமயமாதலுக்கு கார்பன்டை ஆக்ஸைடு வாயுவே முக்கியக் காரணமாக அமைகிறது. அதுவே ஓசோன் படலம் பாதிப்படையக் காரணமாகவும் அமைகிறது. எண்ணெய்ப் பயன்பாடு, மோட்டார் வண்டி உபயோகம், நிலக்கரி உபயோகம், நிலப்பயன்பாடு, காடுகளை அழித்தல், சிமெண்ட் உற்பத்தி மற்றும் இயற்கை எரிவாயுக்களை எரித்தல் முதலியவை கார்பன்டை ஆக்ஸைடு வெளிப்பாட்டிற்கு முக்கியக் காரணமாக அமைகின்றன.

**மனிதனால் ஏற்படும் விளைவுகள்:**

**மாசுபாடு:**

சுற்றுச்சூழலுக்குப் பெரும்பாலான தீங்குகள் மனிதனாலேயே ஏற்படுத்தப்படுகின்றன. மாசுபாடு என்பது பல அளவுகளில், வடிவங்களில் ஏற்படுகிறது. புதை படிவ எரிபொருட்களை எரிப்பதால் மாசுபடுதல் ஏற்படுகிறது. புதை படிவ எரிபொருட்கள் என்பவை நிலக்கரி, பெட்ரோல் முதலிய கரிமப் பொருட்களாகும். இவைகளை எரிக்கும்பொழுது கார்பன்டை ஆக்ஸைடு வாயு வெளிவிடப்படுகிறது. எண்ணெய் மற்றும் நிலக்கரிச் சுரங்கங்களைத் தோண்டும்

போது இயற்கையிலேயே பாறைகளுக்கிடையில் உருவாகியுள்ள மீத்தேன் முதலிய வாயுக்கள் வெளிவருகின்றன.

**மக்கள் தொகைப் பெருக்கம்:**

மனிதனால் புவிவெப்பமயமாதல் ஏற்படக்கூடிய அடுத்த காரணம் மக்கள் தொகைப் பெருக்கமாகும். அதிக மக்களெனில், அதிக உணவு மற்றும் அதிகப் போக்குவரத்து முறைகள். அப்படியெனில் அதிக அளவிலான மீத்தேன் வெளிப்பாடு இதற்குக் காரணமாக அமைவது. அதிக அளவிலான புதை பொருள் எரிப்பு மற்றும் அதிக வேளாண்மை. மற்றொன்று உரங்களிலிருந்து வெளிப்படும் மீத்தேன் வாயு. கால்நடைகளும் உணவுப் பொருளாகும் போது அதிலிருந்து கிடைக்கும் உரங்களும், மீத்தேன் வாயுவின் அளவும் அதிகரிக்கும். மக்கள் தொகை அதிகரிப்பால் போக்குவரத்து வாகனங்கள் அதிகரிக்கின்றன. வாகன அதிகரிப்பால் அவற்றால் வெளியிடப்படும் கார்பன்டை ஆக்ஸைடு வாயுவின் அளவும் அதிகரிக்கும். அது புவி வெப்பமயமாதல் விளைவினைத் தீவிரப்படுத்தும். மக்கள் தொகைப் பெருக்கத்தினால் சுவாசத்தின் போது வெளிவிடப்படுகின்ற கார்பன்டை ஆக்ஸைடு வாயுவின் அளவும் அதிகரிக்கும். மேலும் காடுகளை அழிப்பதால், மரங்களால் ஒளிச்சேர்க்கைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்ற கார்பன்டை ஆக்ஸைடு வாயுவின் அளவும் குறைந்து, புவிவெப்பமயமாதல் அதிகரிக்கும். சுற்றுச் சூழலின் மிக முக்கியக் காரணிகளான மரங்களை நாம் நம் தேவைகளுக்காகப் பயன்படுத்துகிறோம். அவற்றை நாம் மீண்டும் வளர்ப்பதில்லை. எனவே, நாம் தொடர்ச்சியாக இயற்கை வளங்களைப் பயன்படு பதிலீடு செய்வதில்லை.

(கட்டுரை தொடரும்)

## கன்னியாகுமரியில் அன்ன பூஜை







# அறுபடை வீடுகள்

## என்.எஸ். பி

முருக வழிபாடு தமிழ் தந்த நலங்களில் ஒன்று. தமிழ்க் கடவுள் என்றும், குறிஞ்சிக் கடவுள் என்றும், தென்புல–வடபுல இசைவில் பக்தியும் ஞானமும் பெருக்கிய ஆன்மீக நாட்டம் என்றும் போற்றப்படும் மங்கலப் பொருள் கொண்ட கடவுட் சுட்டு முருகன்.

முருக வழிபாடு இலக்கியம், சிற்பம், ஓவியம், நடனம், இசை போலும் அனைத்துக் கலைகளுக்கும் வளம் தந்தது. போரூர், வயலூர், எண்கண், விராலிமலை, மருதமலை, சென்னிமலை, சென்னை (கந்த கோட்டம்), காஞ்சி (குந்தகோட்டம்), இலஞ்சி, திருச்செங்கோடு போலும் பல தலங்களுக்கும் நலம் தந்தது. எனினும் முருக வழிபாடு அறுபடை வீடுகளில் தனிச் சிறப்புப் பெற்றது.

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி (திருவாவினன்குடி) சுவாமிமலை (திருவேரகம்), திருத்தணிகை, (குன்றுதோறாடல்), பழமுதிர்சோலை என்பன அறுபடை வீடுகள் எனப்படும். திரு முருகாற்றுப்படை கூறும் ஆற்றுப் படைவீடுகளே அறுபடை வீடுகளாயிற்று என்றும், முருகனின் போர்த்தளங்களே அறுபடைவீடுகளாகவும் எடுத்துரைப்பர். அகமுகப் பயணத்தில் ஆன்மீக வெற்றிக்கு உதவும் ஆறுதளங்கள் எனக் கருதலாம்.

திருப்பரங்குன்றம் மதுரையின் அண்மையில் உளது. குடைவரைக் கோயிலாக அமைந்த நலமுடையது. தெய்வயானையின் திருமணத்தலம் என்பது புராண ஐதீகம். தெய்வீகம் வளர்த்திடும் கிரியா சக்தியின் மங்கல–மணம் இடம் என்பது தத்துவம்.

திருச்சீரலைவாய் என்பது திருச்செந்தூர். இது கடற்கரைத்தலம். நாழிக்கிணறும், வள்ளிகுகையும், கருவறை சுற்றிய பாம்பறையும் மெய்ஞானத் தேட்டமுடையோர்க்கு ஆன்மீகச் சிலிர்ப்புகள். பன்னீர் இலை விபூதி விசேஷம். ஆணவ அழிப்பின் குறியீடான சிலிர்ப்புகள் சூரசம்ஹாரம் ஆண்டுதோறும் கந்தசஷ்டி விழாவில் நிகழும். செந்தூர் கடலும் செவ்வேளன்பர் கடலும் குதூகலக் காட்சி நல்கும் அற்புத விழா அது.

திருவாவினன்குடியைப் பழனியாகக் காண்பர். பழத்திற்கான முருகனை ஆண்டியாக்கிய கதை பக்தர்க்கு இனிக்கும். பஞ்சாமிர்தமோ அனைவர்க்கும் இனிக்கும். நவபாஷாணச் சிலை போகர் பிரதிஷ்டித்தது என்பத பக்தர் பெருமிதம். வேல் வேல் என முழங்கியாடும் காவடியாட்டமும், காணிக்கை முடி தந்து குளிர் சாந்தம் பூசிய மொட்டைத் தலைகளும் பக்தி மொழி பேசும்.

திருவேரகம் என்பது சுவாமி மலையாகப் போற்றப்படுகிறது. சுவாமிநாதன் என்னும் திருநாமம் வென்ற முருகன் தந்தைக்குப் பிரணவ உபதேசம் செய்த புராண ஐதிகத்தில் மகிழ்கிறது இம்மலை. பிரணவமும், பிரணவ உபதேசமும் ஆன்மீக மையச் சுட்டுக்கள்.

குன்றுதோறாடல் என்பது குன்றுகள் அனைத்துமே முருகனைப் போற்றும் திருத்தலங்கள் என்ற நம்பிக்கையை கருவாகக் கொண்டது.

## வள்ளியூர் மேனிலைப்பள்ளி விவேகானந்த கேந்திர வித்யாலயா புதிய கட்டிடத் திறப்பு விழா


ஸ்ரீமத் சுவாமி சைதன்யானந்தாஜி

துணைத் தலைவி குமாரி. நிவேதிதா பிடே

தாளாளர் திரு எஸ்.கே. சுப்பிரமணியம்

செயலர் திரு எஸ். அய்யப்பன்







Printed by : Shri. Pravin V. Dabholkar at M/s RNR Printers and Publishers, 8, Thandavarayan Street, Triplicane, Chennai - 600 005.

Published by : Shri. Pravin V. Dabholkar for Vivekananda Kendra Prakashan Trust, 5, Singarachari Street, Triplicane, Chennai - 600 005.

Editor : Shri. P. Parameshwaran, President, Vivekananda Kendra, Vivekanandapuram, Kanyakumari - 629 702.